


முதலாவது ஆண்டுநிறைவை கொண்டாடுகிறது
Celebrating one year of bringing you the news
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ்: 260 பிலவ வருடம், ஆனி மாதம் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (22.06.2021) ஹிஜ்ரி - 1442, ஜில்ஹாயிதா பிறை - 10, 0115886187 - பக்கங்கள் 16 விலை ரூ.30

## கொரோனா சமூகப்பரவலாகிவிட்டது; 20 வீதமானோர் இறக்கும் அபாயம்!

### ஆளுங்கட்சி எம்.பி. பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரிக்கை



•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்று சமூகப் பரவலடையவில்லை என அரசாங்கம் கூறுவது முற்றிலும் தவறானது. இலங்கையில் கொரோனா தொற்று சமூகப் பரவலடைந்தேயுள்ளது. இந்நிலையில், கொரோனா தொற்றுக் கட்டுப்பாட்டில் அரசாங்கம் பொருத்தமற்ற வழியிலேயே செயற்படுவதாக ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்தோடு, நாட்டில் 20 வீதமானோர் கொரோனா தொற்று ஏற்பட்டு இறக்கும் அபாயத்திலுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

02»

## நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று சபாநாயகரிடம்

•யோ.தர்மராஜ்

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்றைய சபை அமர்விற்கு முன்னர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியினால் எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து, அமைச்சர் உதய கம்மன்பில வலுசக்தி அமைச்சிலிருந்து பதவி விலக வேண்டும் என்பதோடு, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கான பிரேரணையில் கடந்த வாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டனர்.

03»




(படப்பிடிப்பு :- சமன் அபேசிறிவர்தன)

03ஆம் பக்கம் பார்க்க...

## அடுத்த வாரங்கள் ஆபத்தானவை!

### பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் சிவப்புக்கொடி

•யோ.தர்மராஜ்

கடந்த ஓரிரு நாட்களாக, நாட்டின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட எழுமாறான பரிசோதனைகளில் அதிக எண்ணிக்கையிலான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட ஆரம்பித்துள்ளதால், ஏதேவொரு வகையில் கொரோனா தொற்று சமூகத்திற்குச் சென்றிருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின்...

03»

## இந்திய கொரோனா திரிபுடன் மேலும் ஒருவர் அடையாளம்

•யோ.தர்மராஜ்

கொழும்பு – 2 மாதிவெல பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள மாறுபட்ட அசாதாரண தன்மை கொண்ட மாதிரியானது, டெல்ட்டா திரிபு அல்லது புதிய திரிபாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளதாக சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

02»

## ‘தமிழன்’ மேலும் சாதனைகளை படைத்து முன்னேற வேண்டும்

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து



இரண்டாவது அகவையில் காலடியெடுத்து வைக்கும் தமிழன் பத்திரிகைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்தினை தெரிவித்துள்ளார். அவர் தனது வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது,

02»

## மகளின் திருமணத்திற்காக போதைப்பொருள் கடத்தல்

### பொலிஸ் இன்ஸ்பெக்டர் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

•யோ.தர்மராஜ்

ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ள களுத்துறை தெற்கு பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர், தன்னுடைய மகளின் திருமணத்திற்கு பணம் திரட்டுவதற்கே போதைப்பொருள் கடத்தியதாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

02»

## பக்கச்சார்பின்மை காரணமாக வரவேற்பை பெற்ற பத்திரிகை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து



இலங்கையில் அச்சு ஊடக வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை “தமிழன்” பத்திரிகையால் அடைய முடிந்தது. இவ்வளவு குறுகிய காலத்தில், தமிழன் செய்தித்தாள் அதன் பக்கச்சார்பற்ற தன்மையால் வாசகர்களிடையே பெரும்புகழ் மற்றும் ஸ்திரத்தன்மையைப் பெற முடிந்தது என நம்புகிறேன்.

02»



1- இராஜகிரியவில் அடகுக்கடை ஒன்றில் காத்திருந்த கூட்டம் இது. கொரோனா பரவல் நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட் டுள்ளதை இது காட்டுகின்றது.

2- திறக்கும்வரை காத்திருந்து மதுபானம் வாங்க கொட்டாவையில் நேற்று மதுபானசாலைகளில் திரண்டிருந்த கூட்டம் இது.

2021, ஜூன் 22 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

## ‘தமிழன்’ உங்களுக்கானவன்

‘தமிழன்’ பத்திரிகை இன்று தனது இரண்டாவது அகவையில் காலடியெடுத்துவைக்கின்றது. வாசகர்களின் அபரிமிதமான ஆதரவும், விளம்பர தாரர்களின் ஒத்துழைப்பும், விமர்சகர்களின் கருத்துகளும், ஆசிரியபீட பணியாளர்களின் அயராத உழைப்பும் பிராந்திய செய்தியாளர்களின் ஒத்துழைப்பும் கடந்த ஒரு வருட காலத்தில் எம்மை உறுதியாக முன்னோக்கிச் செல்லவைத்துள்ளன.

கொரோனா வைரஸ் காலத்தில், எதிர்காலத்தைத் தொலைத்துவிடுவோமோ என்ற துயரத்தில் எல்லா வியாபாரங்களும் அச்சப்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில், துன்பங்கள் வரலாம், ஆனால் காலச்சக்கர சுழற்சிக்கேற்ப எதனையும் எதிர்நோக்கி அதனை வெல்லவேண்டியதை இலட்சியமாக கொண்டிருப்போம் என்ற உத்வேகத்தை அளித்து, இந்தப் பத்திரிகையினை ஆரம்பித்து, அதன் முன்னேற்றத்திற்கு உறுதுணை வழங்கிக் கொண்டிருக்கிறது லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனம்.

தமிழன் பத்திரிகை தனிச்செடியல்ல. அருண, த மோர்னிங், தருவ, தரணி என்று பல விருட்சங்களைக் கொண்ட வனத்தில் தமிழனும் துளிர்விட ஆரம்பித்துள்ளான். இந்த ஒரு வருட காலத்தில், தற்போதைய நாட்டின் சூழ்நிலைகளுக்கு மத்தியில் மின்னிதழாகவும், அச்சு வடிவிலும் தினசரி எமது மக்கள் பணி நடந்துகொண்டிருக்கிறது. இளவயதினரின் கல்வித்தேவையை கருத்திற்கொண்டு ‘ஜூனியர் தமிழன்’ சஞ்சிகையை ஆரம்பித்துள்ள லிபர்ட்டி குழுமம் விரைவில் அதனை தனி வார இதழாக வெளியிடவுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். அதேசமயம் www.thamilan.lk இணையத்தினூடாக விரைவுச் செய்திகளை வழங்கி வரும் நாம், அதனையும் புதிய தொழில்நுட்ப யுகத்திற்குக் கொண்டுசெல்லும் பணிகளை மேற்கொண்டுள்ளோம்.

கொரோனா வைரஸால் முழு உலகமும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், இலங்கையும் அதன் தாக்கங்களை வெகுவாக எதிர்நோக்கி வருகின்றது. மக்களின் அன்றாட சிரமங்களை அறிந்துவைத்துள்ள நாம், அவர்களின் துயர் தீர ஊடகங்களினூடாக எம்மாலான பணிகளை விளம்பரப்படுத்தாமல் செய்துவருகிறோம்.

அதேசமயம் நாட்டின் தமிழ்பேசும் மக்களின் ஒவ்வொரு பிரச்சினையையும், அவர்களின் உணர்வுகளையும் கடந்த ஒருவருட காலத்தில் தைரியமாகக் கொண்டுவந்துள்ளோம். பத்திரிகை ஆரம்பத்தின்போது எமக்குப் பல்வேறு முத்திரைகள் குத்தப்பட்டன. ஒவ்வொரு கதை சொல்லப்பட்டது. ஆனால், அவற்றையெல்லாம் பொய்யாக்கி இதனை மக்களுக்கான பத்திரிகை என்று செயலால் நிரூபித்திருக்கிறோம். கடைசிவரை மக்களுக்கான பத்திரிகையாகவே இது இருக்கும் என்று ஆணித்தரமாக குறிப்பிட்டுவைக்க விரும்புகிறோம்.

தமிழ் பேசும் மக்கள் இன்று இக்கட்டான நிலையில் இருக்கின்றனர். அந்த மக்கள் குழாமின் பிரச்சினைகளை எடுத்துரைப்பதில், அதனை உரத்துச் சொல்வதில் நாங்கள் எப்போதும் எவருடனும் சமரசம் செய்துகொள்ளப்போவதில்லை. அரசியல் தீர்வு பற்றிய கனவில் இருந்த தமிழர்களுக்கு கட்டியிருந்த கோவணமான மாகாணசபையே காணாமல் போயிருக்கிறது. மறுபுறம் எமது சகோதர முஸ்லிம் சமூகம் சொல்லொணா துயரங்களை எதிர்நோக்கியுள்ளது. இவர்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கவேண்டிய அரசியல் தலைமைகளும் ஆங்காங்கே அரசியலுக்காய் பிரிந்துபோய் நிற்கையில், அம்மக்களின் உரிமைக்குரலை வெளிக்கொணர வேண்டிய காலத்தின் கட்டாயமும், தேவைப்பாடும் ஊடகங்கள் முன்னுள்ளன. அந்தப் பொறுப்பை நாம் ஒருபோதும் தட்டிக்கழிக்கப் போவதில்லை.

ஒவ்வொரு அரசும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதாக உறுதியளிக்கின்றது. ஆனால், ‘ஆற்றைக் கடக்கும் வரை அண்ணன் தம்பி, ஆற்றை கடந்தபின் நான் யாரோ நீ யாரோ’ என்பதுபோல் அந்த ஆட்சியாளர்கள் நடந்துகொண்டுள்ளனர். பழகுவதற்கும், பேசுவதற்கும் இனிமையான சிங்கள அரசியல் தலைவர்கள், தமிழர்களுக்கு அரசியல் தீர்வு என்ற பேச்சு வரும்போது அப்படியே தலைகீழாக மாறிவிடுகின்றனர். அண்மைக்கால தீவிரவாத சக்திகளின் செயற்பாடுகளால் இன்று முஸ்லிம் சமூகமும் சிறு பிரச்சினைக்குக் கூட தீர்வைப் பெறமுடியாமல் தவித்து நிற்கின்றது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்த மக்களின் நிலைப்பாட்டை வெளிக்கொணர்வது எமது தார்மீக கடமையும் பொறுப்புமாகும்.

கொரோனா இக்கட்டுடன் முழு நாடும் தவித்து நிற்கின்றது. அனைவரும் ஒன்றுசேர்ந்து பொறுப்புடன் நாட்டைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். அதற்கு உலக நாடுகளின் உதவியைப் பெறவேண்டும். ஆனால், இலங்கை அரசோ, சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணி மேற்குலக நாடுகளின் அதி ருப்தியை சம்பாதித்துள்ளது. இப்போதுள்ள நிலை மையை உற்றுநோக்கினால் எதிர்காலம் பல சவால் களை எமது நாட்டின் முன்னே தரப்போகிறது. சாதாரண காலமென்றால் சமாளித்துவிடக்கூடிய அந்த சவால்கள், இந்த கொரோனா தாக்கத்தோடு எமக்கு மேலும் பொருளாதார....

02»





குளோபல் பேங்கிங் மற்றும் பைனான்ஸ் நிறுவனத்தினால் விருதளிக்கப்பட்டது.

AIA இன்ஷுவரன்ஸ்
இலங்கையின் மிகச் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக தொடர்ந்து 2 ஆண்டுகள்!

- மிகப்பெரிய மூலதனத் தேவைகளின் சதவீத பூர்த்தி
- 30 ஆண்டுகளாக வாடிக்கையாளர்களுக்கு பங்கிலாபம் (2020 ஆம் ஆண்டு 9.18% ஐ பகிர்ந்துள்ளது)
- விவேகமான மற்றும் பாதுகாப்பான முதலீடுகள்
- 100 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவமும், சக்தியும் வாய்ந்த AIA குழுவின் வலுவான ஆதரவும்

ஓய்வூதியம், தேகாரோக்கியம் மற்றும் ஆயுள் காப்புறுதி

HEALTHIER, LONGER, BETTER LIVES

AIA Insurance Lanka Limited (Co.No.PQ 18 PB) 03/23/2021

## தமிழன் மேலும்....

பொறுப்பான ஊடக சேவையை ஆற்றிவரும் தமிழன் பத்திரிகை தனது ஓராண்டு பூர்த்தியை இன்று (2021.06.22) கொண்டாடுகிறது.

ஓராண்டு பூர்த்தியை கொண்டாடும் தமிழன் பத்திரிகைக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இன நல்லிணக்கம், அமைதி, சமூக ஒற்றுமை என்பன மேம்படவும், நாடு முன்னோக்கிச் செல்லவும் ஊடகங்களின் ஆதரவு இன்றியமையாததாகும். ஊடகங்கள் மிகவும் பொறுப்பாக செயற்பட்டு அப்பணிகளை நிறைவேற்ற வேண்டும். அந்தவகையில், தமிழன் பத்திரிகை தனது பணியை செவ்வனே முன்னெடுத்துச் சென்று நாட்டிற்கும், சமூகத்திற்கும் பெரும்பணியாற்ற வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்து, அவற்றுக்குரிய தீர்வை பெற்றுக் கொடுக்கும் பாரிய பொறுப்பு தமிழ் ஊடகங்களுக்கு உள்ளது. அதற்கான ஊடக சுதந்திரத்தை எமது அரசாங்கம் தாராளமாக வழங்கியுள்ளது என்பதை மகிழ்வுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பத்திரிகை ஆசிரியரை தனிப்பட்ட ரீதியில் அறிந்தவன் என்பதால், அவரின் ஊடக அனுபவம் எனக்கு நன்கு தெரியும். அவரது அனுபவத்தை கொண்டு இன நல்லிணக்கம், சமூக மேம்பாடு மற்றும் தமிழ் மக்களுக்கான சேவைகளை அவர் சிறப்பாக ஆற்றுவார் என்ற திடமான நம்பிக்கை எனக்கு உண்டு.

ஊடகத்துறையில் தமிழன் பத்திரிகை மென்மேலும் மேன்மை பெறவும், சிறந்த சேவையாற்றி பல சாதனைகளை நிகழ்த்துவதற்காக நீங்கள் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளும் வெற்றிபெறவும் நான் மனதார வாழ்த்துகின்றேன். - இவ்வாறு பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய கொரோனா...

கொழும்பு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று (21) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் மாறுபட்ட தன்மைகொண்ட சந்தேகத்திற்கிடமான மாதிரிகள் கிடைத்தால் அது குறித்து எங்களுக்கு தெரிவிக்கப்படும். அதற்கமையவே மாதிவெல, பிரகத்திபுர பகுதியில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். மாதிரி ஏனைய மாதிரிகளை விட மாறுபட்ட அசாதாரண தன்மைகொண்ட சந்தேகத்திற்கிடமானதாக காணப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது குறித்து நாங்கள் தொடர்ந்து ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

குறித்த ஒருவருக்கே இவ்வாறான மாறுபட்ட அசாதாரணமான மாதிரி அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும், ஏனைய பகுதிகளில் இவ்வாறான மாதிரிகள் கண்டறியப்பட்டுள்ளதாக இதுவரை உறுதிபடுத்தப்படவில்லை.

இதேவேளை, தெமட்டகொடை பகுதியிலும் இவ்வாறான மாதிரிகள் கண்டறியப்பட்டு அப்பகுதி முடக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு பின்னரே அங்கு இந்திய திரிபான டெல்ட்டா அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும், ஒரு வாரத்திற்கு முன்னரே அங்கு முறையான கட்டுப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறான நிலைமையிலேயே தற்போதும் மாறுபட்ட அசாதாரணமான மாதிரி அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும், அது எவ்வாறானது என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. அசாதாரண முறையிலுள்ள இந்த மாதிரி, டெல்ட்டா திரிபாக இருக்கலாம். அல்லது வேறு திரிபாகவும் இருக்கலாம். இல்லையேல் புதிய திரிபாகக் கூட இருக்கலாம். ஆகவே, இவ்வாறான அசாதாரண முறையிலுள்ள மாதிரிகள் அடையாளம் காணப்படும் பகுதியில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்பதோடு, அங்கு கடுமையான நடைமுறைகளும் முன்னெடுக்கப்படும்.

தெமட்டகொடையில் அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எவ்வாறு டெல்ட்டா திரிபு தொற்றியது என்பது குறித்து இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், இந்தியாவில் டெல்ட்டா அடையாளம் காணப்பட்ட பகுதியிலிருந்து பலர் இங்கு வந்து சென்றிருக்க முடியும். ஆகவே, பலவழிகளில் இந்தத் திரிபு இங்கு பரவியிருக்க வாய்ப்புள்ளது - என்றார்.

## கொரோனா...

கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் நாட்டைத் திறப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் குறித்து வினவிய போதே அவர் இதனை 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனா தொற்றின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. நாளொன்றுக்கு 2 ஆயிரத்திற்கும் அதிகமான நோயாளர்களும், 50 வரையான கொரோனா மரணங்களும் பதிவாகின்றன. இந்த நிலையில் தொடர்ந்து கொரோனா தொற்று தீவிரமடையும் அறிகுறிகளே காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில், நாட்டை முடிந்தது இரண்டு, மூன்று வாரங்களுக்கு தொடர்ந்து முழு ஊரடங்கை அமுல்படுத்த வேண்டும். அந்த காலப்பகுதியில் மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதற்கு தேவையான நிதியை ஒதுக்க வேண்டும். குறிப்பாக, ஏனைய நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்குவதைக் காட்டிலும் மக்களின் தேவைகளுக்காகவும், அவர்களின் உணவிற்காகவும் அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து நிதி ஒதுக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளைக் கொண்டு மக்களை மூன்று வாரங்களுக்கு வீட்டிற்குள்ளேயே முடக்கி வைக்க முடிந்தால் முழு ஊரடங்கின் பிரதிபலனையும் பெற முடியும்.

முழு நாட்டிற்கும் ஒரே வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். சுகாதாரத் துறையின் விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்டு இவ்வாறான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக, கொரோனா கட்டுப்பாட்டிற்காக சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து செயற்படும் வகையில் நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து கட்சித் தலைவர்களையும் கொண்டு குழுவொன்றை அமைக்குமாறு கூறினேன். அவ்வாறான ஒரு குழுவை நியமித்தால் அனைவரின் ஆலோசனைகளைக் கொண்டும் கொரோனாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்திருக்கும். எனினும், அரசாங்கம் அதனை செய்யவில்லை.

இதேவேளை, நாட்டில் தற்போது, அதிக வயதானவர்கள், இருதயநோய், சீறுநீரக நோய், நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாடுகள் உள்ளிட்ட ஏனைய நோய் தாக்கமுடைய 20 வீதமானோர் கொரோனா தொற்று ஏற்பட்டு இறக்கும் அபாயத்திலுள்ளனர். இவர்களின் பட்டியலை தயாரித்து தடுப்பூசிகள் வழங்கும் பட்சத்திலேயே மரணங்களை தடுக்க முடியும்.

இந்த நிலையில், கொரோனா தொற்று கட்டுப்பாட்டில் அரசாங்கம் பொருத்தமற்ற வழியிலேயே செயற்படுகின்றது. நாங்கள் முன்வைக்கும் யோசனைகளைக் கூட முன்னெடுப்பதில்லை. சுகாதார அதிகாரிகள், பொதுமக்கள் என அனைவரும் முறையாக செயற்பட வேண்டும்.

இதேவேளை, கொரோனா தொற்று சமூகப் பரவலடையவில்லை என அரசாங்கம் கூறுவது முற்றிலும் தவறானது. இலங்கையில் கொரோனா தொற்று சமூகப் பரவலடைந்தேயுள்ளது. 6 மாதங்களுக்கு முன்னரே நான் இதனைக் கூறினேன். அதற்குத் தேவையான வழிமுறைகளையும் முன்வைத்தேன். எனினும், அவற்றை முன்னெடுக்கவில்லை. மாறாக, நாட்டில் கொத்தணிகளே இருக்கின்றன என்ற அடிப்படையிலேயே இவர்கள் செயற்படுகின்றனர்.

இதனால், எவ்வேளையும் இந்த தொற்று ஏனையோரிடத்திலிருந்து நமக்கு பரவும் ஆபத்து காணப்படுவதால், பொதுமக்களும் முறையான சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்தாக வேண்டும். குறிப்பாக, என்னைப் பொறுத்தவரை ஒரு மீற்றர் இடைவெளி போதுமானதல்ல. குறைந்தது இரு மீற்றர்கள் இடைவெளியை பேண வேண்டும் - என்றார்.

## தமிழன்...

சுமைகளையே தரப்போகின்றன. இருந்தபோதிலும் அவற்றை சமாளித்து முன் செல்லக்கூடிய தன்னம்பிக்கையைக் கொண்டிருப்பதே எம் முன்னுள்ள தேவையாக இருக்கிறது.

தமிழன் பத்திரிகையின் பெயர் குறித்தான சர்ச்சைகள் ஆரம்பத்தில் நிலவின. இது தமிழர்களுக்கான பத்திரிகை என்று சில தரப்பினரால் பிரசாரம் செய்யப்பட்டு முஸ்லிம் சகோதரர்களை விரசமாக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், கடந்த ஒருவருட காலத்தில் வாசகர்கள் அதனை நன்கு புரிந்திருப்பர். மதங்கள், இனங்கள் வேறுபட்டாலும் இலங்கையில் தமிழரும், முஸ்லிம்களும் கொண்டாடுவது தமிழ் மொழியைத்தானே. முஸ்லிம்களின் புர்க்கா தடை முதல் ஈஸ்ரர் தின தாக்குதல் தொடர்பில் அப்பாவி முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டமை வரை முஸ்லிம்களின் பிரச்சினைகளை, அவர்களின் உரிமைகளை நாங்கள் வெளிக் கொணர்ந்திருக்கிறோம். தமிழ், முஸ்லிம் இனவாதிகளுக்கும், அவர்களின் இனவாத பேச்சுகளுக்கும் நாங்கள் எமது பத்திரிகையில் முன்னுரிமை வழங்கி இடமளித்ததில்லை. மக்களிடையே இனவாதத்தை வைத்து அல்லது மதவாதத்தை தூண்டி பத்திரிகை வியாபாரத்தை நடத்தும் அற்பத்தனமான தேவை எமக்கில்லை என்பதை இன்றைய நாளில் திட்டவட்டமாக கூறிவைக்க விரும்புகிறோம்.

கடந்த ஒருவருட காலம் எமக்கு மிகுந்த சவால்களை கொண்ட காலமாக இருந்தாலும் தடைகளை உடைத்து தகர்த்தெறிந்து முன்னோக்கி வந்திருக்கிறோம். இனியும் அப்படியே. அரசியல்வாதிகளின் பேச்சுகளுக்கும், அவர்களின் பொருட்களுக்கும், அன்பளிப்புகளுக்கும் விலைபோகாமல் உள்ளதை உள்ளபடி கூறி வந்திருக்கிறோம்.எங்களை எவரும் விலைக்கு வாங்க முடியாது. ஊடக தர்மங்களை இயன்றளவு உச்சத்தில் பின்பற்றி வந்துள்ள நாம் அதே பயணத்தை, அதே கோட்பாடுகளுடன், எமக்கேயுரிய சித்தாந்தங்களுடன் தொடருவோம்.

தமிழனின் ஒருவருட பூர்த்தியான இன்றைய நாளில், ஊடகப்பணிக்காக வந்து ஆட்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்களையும், தமிழ் ஊடகத்துறை வளர்ச்சிக்குப் பாடுபட்ட மறைந்த மூத்த ஊடகவியலாளர்களையும் நினைவுகூரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலனாக தமிழன் தொடர்ந்து இருப்பான். தமிழ் கூறும் நல்லுலகம் இருக்கும்வரை தமிழன் வாழ்வான்.

## பக்கச்சார்பின்மை...

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமிழன் பத்திரிகையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ,

இலங்கையின் அரசியல் செயற்பாட்டிற்கும், பத்திரிகைகளுக்குமிடையிலான உறவு ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது, அரசியல் கட்சிகள் உத்தியோகபூர்வமாக உருவாகுவதற்கு முன்பே, தனிப்பட்ட அரசியல் கருத்துகளைக் குறிக்கும் பத்திரிகைகள் வெளிவந்தன. கட்சி அமைப்பின் வருகையுடன், ஒவ்வொரு கட்சியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்கள் வெளிவந்தன, அவை கட்சியின் கருத்துக்களைப் பரப்புவதற்கான முக்கியமான கருவியாகக் காணப்பட்டன.

இருப்பினும், எல்லாவற்றையும் அரசியல் மயமாக்கிய சூழ்நிலையில், ஊடகங்களின் பொறுப்பு மகத்தானது.

பேனா, வாளை விட சக்தி வாய்ந்தது என்று நாம் அனைவரும் நம்புகிறோம். ஒரு ஜனநாயக சமுதாயத்தின் நல்வாழ்வில் ஊடகங்களின் பங்கு மகத்தானது.

அந்த முயற்சியில் தமிழன் செய்திப்பத்திரிகை சாதகமான பங்கை வகிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஊடக சுதந்திரத்திற்காக நாங்கள் நிபந்தனையின்றி முன் நிற்பதோடு, எந்த ஊடகம் மீதும் கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடாது என்பதே எங்கள் உறுதியான கொள்கையாகும். தேவைப்படுவது கட்டுப்படுத்தல்கள் அல்ல, 'சுய கட்டுப்பாடுகளே.'

எனவே, கடந்த ஓராண்டு முழுவதும் தமிழன் செய்தித்தாளின் வருகைக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம், காலம் முழுவதும் மிகவும் பாராட்டத்தக்க சேவையைச் செய்ய உங்கள் பத்திரிகைக்கு சக்தி கிடைக்கட்டும் என்று வாழ்த்துகிறேன் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குறிப்பிட்டுள்ளார்.

## மகளின்...

கடந்த 18ஆம் திகதி ஹிக்கடுவ, பத்தேகம வீதியில் ஒரு சொகுசுக் காரில் 510 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களை கொண்டு சென்றபோதே, குறித்த உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் சீருடையுடன் கைதுசெய்யப்பட்டார்.

இதனையடுத்து, அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது, தன்னுடைய மகளின் திருமணத்தை ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடத்துவதற்கு பணம் திரட்டுவதற்கு விரும்பியதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் மூன்று வாரங்களுக்கு முன்னர் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையினூடாக கொழும்பிற்கு 75 கிலோ ஹெரோயின் கடத்திக் கொண்டுவந்துள்ளார். இதற்காக, அவருக்கு 20 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது. இவருக்கு நான்கு பிள்ளைகள் இருப்பதுடன், அவர்கள் வாத்துவ பகுதியில் வசிக்கின்றனர். இவர் வாத்துவ, கொழும்பு மற்றும் அம்பாறை பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றியுள்ளார்.




# கடலுணவு வியாபாரம் குறித்த நீண்ட நாள் சிக்கலுக்குத் தீர்வு

ஊர்காவற்றுறை தம்பாட்டி பிரதேசத்தில் கடலுணவு வியாபாரத்தில் நீண்ட காலமாக நிலவிய பிரச்சினைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தீர்வு காணப்பட்டுள்ளது.

தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், தம்பாட்டி கடற்றொழிலாளர்களிடம் கடலுணவுகளை கொள்வனவு செய்யும் வர்த்தகர்களுக்கும் இடையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளமையினால், சங்கத்தினை புனரமைப்பு செய்து புதிய நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் எனவும், புதிய நிர்வாகத்துடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் கடலுணவு வர்த்தகர்களினால் குறித்த கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், தற்போதைய கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக தெரிவுகளை தள்ளிப் போடுவது தொடர்பாக வடக்கு ஆளுநருடன் கலந்துரையாடியமையை சுட்டிக்காட்டியதுடன், புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படும் வரையில், கடலுணவு வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரின் மேற்பார்வையில் மேற்கொள்வது சிறந்தது என்ற கருத்தை முன்வைத்தார்.

குறித்த கருத்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புக்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்ற கலந்துரையாடலில், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி, ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைவர் ஜெயகாந்தன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முனனாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் ஜெகன் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வியாழேந்திரனின் பாதுகாவலரது துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி



இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் பாதுகாவலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு பிள்ளையாரடி, மன்ரோசா வீதியிலுள்ள வியாழேந்திரனின் இல்லத்தின் முன்பாக இச்சம்பவம் நடந்துள்ளது. 34 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. குறித்த இளைஞர் வீட்டுக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டதால் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக மேற்படி பாதுகாவலர் பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரிவித்தார்.




முன்பக்கத்தில் இருக்கும் படத்திலுள்ள குழந்தை தமிழன் பத்திரிகை முதல் பதிப்பன்று பிறந்த குழந்தை. அவரின் படத்தை இட்டு 'இன்றைய பிறப்பு நாளைய வரலாறு' என்று குறிப்பிட்டிருந்தோம். அந்தக் குழந்தை இன்று இரண்டாவது அகவையில் காலடியெடுத்து வைக்கிறது. அதனை நினைவுகூரும் வகையில் அந்தக் குழந்தையின் படத்தை முன் பக்கத்தில் பிரசுரித்துள்ளோம். எமது முதலாவது பத்திரிகையின் பிரதி இங்கே தரப்பட்டுள்ளது.

(படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)

## அடுத்த வாரங்கள்...

தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்தோடு, பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்ட காலப்பகுதியில் மக்களின் செயற்பாடுகள் கவலையளிப்பதோடு, இந்த நிலைமை தொடர்ந்தால் மீண்டும் ஆபத்தான நிலைமைக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு திறக்கப்பட்டுள்ளது குறித்து நேற்று (21) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு மாதத்திற்குப் பின்னர் சில சுகாதார விதிமுறைகளுக்கமைய இன்று (நேற்று) நாடு மீளத் திறக்கப்பட்டது. எனினும், மக்களின் செயற்பாடுகள் பெரிதும் கவலையளிக்கின்றன. எவ்வித சுகாதார விதிமுறைகளையும் மதிக்காது பல இடங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக ஒன்று கூடியதுடன், தேவையற்ற விதத்தில் அதிக மக்கள் நடமாட்டமும் காணப்பட்டது.

இந்த நிலைமை தொடருமாக இருந்தால் புத்தாண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்ட அதிக ஆபத்தான நிலைமைக்கு எதிர்வரும் வாரங்களில் முகம் கொடுக்க நேரிடும். ஆகவே, பொறுப்புடன் செயற்படுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதேவேளை, இந்தியாவில் அதிக பாதிப்பை ஏற்படுத்திய, மிகவும் ஆபத்தான பாதிப்புகளையும், மரணங்களையும் ஏற்படுத்தக் கூடிய திரிபு தற்போது நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் செயற்பாடுகள் குறித்து யாருக்கும் இதுவரை எவ்வித அனுபவமும் இல்லை. ஆகவே, இந்த ஆபத்தான திரிபு நாட்டில் இருக்கின்றது என்பதை கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். இந்நிலையில், கடந்த ஓரிரு நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் எழுமாறான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் முடிவுகள் தற்போது வெளிவந்த வண்ணமுள்ளன. இந்த முடிவுகளில் அதிக எண்ணிகையிலான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட ஆரம்பித்துள்ளனர். அதன்படி, ஏதேவொரு வகையில் இந்தத் திரிபு சமூகத்திற்குச் சென்றிருக்கின்றது.

ஆகவே, எதிர்வரும் சில நாட்கள் மிகக் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நாட்களாக அமையும். இந்த காலப்பகுதியில் பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளைக் கடுமையாக பின்பற்ற வேண்டும். பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படுவதன் ஊடாக அதிகாரிகளும் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். இதேவேளை, 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்கான சுற்றுநிருபம் கடந்த வாரத்தில் வெளியிடப்பட்டது. அதற்கமைய தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து வெளியேறுவோருக்கு நாங்கள் ரெபிட் அன்ரிஜன் பரிசோதனையே முன்னெடுக்கின்றோம். ஆனால், பி.சி.ஆர். பரிசோதனையில் கிடைத்த முடிவுகள் கிடைக்காது.

எதிர்வரும் வாரங்களில் நாட்டில் கொரோனா நோயாளர்கள் குறைவடைந்தாலும் உண்மையில் அது நோயாளர்களில் குறைவை காட்டாது. மாறாக, நாங்கள் முன்னெடுக்கும் பரிசோதனையின் விளைவுகளினாலேயே அவ்வாறு நடக்கும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இதனால், நோயாளர்களை அடையாளம் காணாது அவர்களை சமூகத்திற்குள் விடுவதால் எதிர்வரும் காலத்தில் மேலும் பல கொத்தணிகள் உருவாகுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன - என்றார்.

## நம்பிக்கையில்லா...

இதனையடுத்து, குறித்த பிரேரணை இன்றைய சபை அமர்விற்கு முன்னர் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டவுள்ளது. எனினும், சபை அமர்வுகள் இரு நாட்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளதால் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்திற்கு திகதிகள் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கையெடுக்கவுள்ளதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை, அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்நோக்குவது குறித்து ஆளுங்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

# 1 ஆவது ஆண்டில் இருந்து முதல்தரத்தை நோக்கி...



# இனியொரு விதிசெய்வோம்!

ஜனநாயக நாடொன்றில் ஊடகத்தின் பங்கு இன்றியமையாததாகும். சுயாதீன ஊடகம் ஜனநாயகத்தின் குறிகளில் ஒன்றாகவும் அடையாளப் படுத்தப்படுகிறது.

இலங்கையில் தமிழ் ஊடகங்களைப் பொறுத்தவரையில் ஜனநாயகத்துக்கான பங்களிப்பு என்பதைவிட ஜனநாயகத் துக்காக பாடுபடுகின்றன என்று கூறுவதே பொருத்தமானதாக இருக்கும்.

குறிப்பாக, அச்சு ஊடகம் நாட்டில் எதிர்கொண்ட சவால்கள் ஏராளம். திறந்தவெளியில் ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்டமை, பத்திரிகைப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள், நிறுவனங்களின் மீதான தாக்குதல்கள் என பத்திரிகைத்துறை சந்தித்த அசம்பா விதங்கள் எண்ணிலடங்காதவை. அவை தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்படுத்திய கறுப்புக் கறைகள் இன்னும் அகற்றப்படவில்லை.

தமிழர்களோடு சேர்ந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இது சிங்களவர்களுக்கு மாத்திரமே சொந்த மான நாடு என உரிமை கொண்டாடப் பட்டபோதே தமிழ்பேசும் மக்களுக்கான இருப்பில் கேள்வி எழுந்தது.

எனினும், ஜனநாயக நீரோட்டத்தில் நன்மையும், தீமையும் நம்மை செதுக்கிக்கொள்வதற்கான கருவிகளே என்ற அடிப்படையில் இலங்கைத் தேசத்தில் தமிழர்கள் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் இருப்பை உறுதிப்படுத்தும் வகையிலும், கலை, கலாசார, பாரம்பரியங்களைக் கட்டிக்காக்கும் வகையிலும் அச்சு ஊடகத்தின் தேவை இருந்தது. அந்த இலக்குக்காக பத்திரிகைகள் பல ஆரம்பிக்கப்பட்டன. எனினும், காலவோட்டத்தில் பல பத்திரிகைகளை பல்வேறு காரணங்களால் தொடர முடியாமல் போயிற்று.

இனரீதியான வன்மத்தை மனதிற்கொண்ட ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களால் வழிநடத்தப்பட்ட பெரும்பான்மையினத்தவர்களுக்கு மத்தியில் தமிழ் பத்திரிகையை நடத்திச் செல்வதென்பது எத்தனை சவால்மிக்கது என்பதை காலம் நமக்குச் சொல்லியிருக்கிறது.

தமிழ்பேசும் மக்களுக்கு அவர்கள் விரும்பும் வகையிலான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க எந்தவொரு ஆட்சி யாளர்களும் விரும்பவில்லை. அப்படியிருக்கும்போது பத்திரிகைச் சுதந்திரம் மாத்திரம் எம்மாத்திரம்?

ஆயினும், தமிழ்பேசும் மக்களுக்காக அவர்களின் மனச்சாட்சியின் குரலாக ஒலிக்கும் தேவை பத்திரிகைகளுக்கு இருந்துவருகிறது. அதேபோல், தமிழ் பேசும் மக்களும் அச்சு ஊடகங்களுக்கு மதிப்போடு கூடிய ஆதரவை வழங்கி வருகிறார்கள்.

பத்திரிகை என்பது நாளாந்த செய்தி களைச் சுமந்துவரும் ஊடகம் மாத்திர மல்ல, அது வரலாற்றை எடுத்தியம்பும் பெறுமதிமிக்க ஆவணமுமாகும். அந்த ஆவணம், நமது ஆரம்பத்தை, தொடர்ச்சியை, அடையாளங்களை கட்டிக்காத்து வருகிறது.

செவிவழியாக மாத்திரம் பேணப்பட்டு வந்த நமது பாரம்பரிய விழுமியங்களை எழுத்துருவாக்கி, அடுத்த சந்ததிக்கு கொண்டுசேர்க்கிறது.

பத்திரிகை - அழுகை, சிரிப்பு, கோபம், அவமானம், வேதனை என அனைத்து உணர்ச்சிகளையும் எழுத்துகளால் பிரதிபலிக்கும் நண்பன். மக்களின் அறிவுப்பசியைப் போக்கும் அட்சயம் அது.

ஒரு பத்திரிகை இல்லாத சமூகம் எந்தளவுக்கு பின்தங்கிப் போயிருக்கும் என்பது உலக நாடுகளின் ஆளுகைக்குட்பட்டு பின்தங்கிப் போயிருக்கும் சமுதாயத்தினர் பலரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இலங்கை மாத்திரம் அதற்கு விதிவிலக்கானதல்ல.

அதுவும் கொடூர யுத்தம் இடம்பெற்ற நாடொன்றில் தமிழ் ஊடகத்துறையை பேணுவதும், சவால்களைத் தாண்டி உயிரைக் காப்பாற்றிக்கொள்வதும் பெரும்பாடு.

மேல்தட்டு மக்கள் என தங்களை மார்தட்டிக்கொள்ளும் சிங்கள அடிப்படைவாதிகள் தமிழ்ப் பத்திரிகைளையும், பத்திரிகையாளர் களையும் முன்ஜென்ம விரோதிகள் போலவே நோக்கினார்கள். அவர்களின் பார்வையில் தமிழர்களும், தமிழ் ஊட கங்களும் குற்றமிழைத்தவர்கள்.

ஆங்காங்கே குண்டுவெடிப்புகள், உண்மையைக் கண்டறிவதில் பல தடைகள், ஆயதமுனை அதிகாரம் என இரும்புவேலிகளைத் தாண்டி பத்திரிகையாளர்கள் தமக்காகவும், மக்களுக்காகவும் ஒரே நேரத்தில் குரல் எழுப்பவேண்டிய தேவை இருந்ததையும் சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

இந்தத் தேசத்தில் தமிழ்பேசும் மக்கள் வெறும் வந்தேறுகுடிகளாகவும் மாற்றாந் தாய் பிள்ளைகளாகவும் பார்க்கப்படு கிறார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில், ‘தமிழன்’ என்ற பெயருடன் ஒரு தமிழ்ப் பத்திரிகை உருவானது.

தமிழ்பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலனாக, பாரம்பரியத்தைப் பேணி புதிய தொழில்நுட்பத்துடன் பயணிக்க வேண்டிய தேவை தமிழனுக்கு இருக்கிறது.

நவீன உலகத்தில் சமூக ஊடகத்தின் வருகையின் பின்னர் தொடர்பாடல் துறையில் பாரிய புரட்சி ஏற்பட்டுள்ளது. அந்தப் புரட்சியானது அரசியல் மாற்றங்கள் முதல் சமூக மாற்றங்கள் வரை ஆழக்காலூன்றியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் பத்திரிகையினை நவீனத்துவத்தின்பால் இட்டுச்செல்லவேண்டியது காலத்தின் கட்டாயமாக மாறிப்போனது. எப்போதும் பழையனவற்றுடன் பயணிப்பதானது தற்கால சமூகத்துக்கு தகவலைச் சொல்வதில் தடைகளை ஏற்படுத்துகிறது.

அந்தக் காரணங்களுக்காக புதியனவற் றுடன் ‘தமிழன்’ தமிழ்பேசும் மக்களிடத் தில் பேச ஆரம்பித்துள்ளான். வெறுமனே செய்திகளைச் சொல்கிறோம் என்பதில் மாத்திரமல்லாது அந்தச் செய்திகளை மக்கள் விரும்பும் வகையிலும் மனதைத் தொடும் வகையிலும் சொல்வதில் ஒரு புதிய பாணியோடு ‘தமிழன்’ பயணிக்கத் தொடங்கியிருக்கிறான்.

அச்சம் தவிர்த்து மக்களின் நிலைப் பாட்டை உள்ளபடி சொல்லும் தமிழ்ப் பத்திரிகையொன்றுக்காக கடந்த காலங்களில் இருந்த இடைவெளி தற்போது நிரப்பப்பட்டுள்ளதாகவே நம்புகிறோம்.

ஊடகப் பெருவெளியில் போட்டித் தன்மை அதிகம் உண்டு. அதிலும் இணையத்தளங்களின் வருகையின் பின்னர் செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும் வேகம் அதிகமாக இருந்தாலும், விழுமியங்கள் பேணப் படுகின்றனவா என்பது கேள்விக்குறியே.

ஊடக ஒழுக்கத்தின் ஊடாகவே ஒரு சமூகம் வழிப்படுத்தப்படுகிறது. மக்களுக்கு செய்திகளையும், தகவல் களையும் வழங்கி அவர்களை விழிப் புணர்வுட்டும் பங்கு பத்திரிகைக்கு இருக்கின்றபோதிலும், ஊடக ஒழுக்கமே அதன் அணிகலனாக விளங்குகிறது.

தற்போதைய காலகட்டத்தில் இணை யம் தொடர்பாக சற்று அறிந்துகொண்ட வர்கள் கூட செய்தி என்ற பெயரில் இணையத்தளங்களை நடத்துகிறார்கள். ஆனால், அவை எந்தளவுக்கு சமூகத்தின் தேவையை பூர்த்திசெய்கின்றன என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

அவ்வாறானவர்கள் ஊடக ஒழுக்க வியலைப் பேணாமை காரணமாக சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவமானங்களும் ஏராளம். குறிப்பாக, பெரும்பாலான இணையத்தளங்களும், சமூக ஊடகங்களும் போலியான செய்திகளையே வழங்குகின்றன. செய்தி களை உறுதிப்படுத்தாமல் செவிவழிக் கதைகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதன் மூலம் மக்கள் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.

இது, நவீன ஊடகப் பயன்பாட்டின் சாபக்கேடாகும். இதிலிருந்து மீள்வதற் கான வழி நேர்மையாக இயங்கும், மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய ஊடகங்களின் கைகளிலேயே இருக்கிறது.

ஆதலால், பத்திரிகை ஊடகங்களுக்கு உள்ள சமூகப்பொறுப்பு மேலும் ஒருபடி கூடியிருக்கிறது என்று குறிப்பிடுவதே இங்கு பொருத்தமானதாகும்.

பத்திரிகை ஊடகம் என்பது இருந் திருக்காவிட்டால், சமூகத்தின் அவலங்களை வெளிக்கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டிருப்பது மாத்திர மல்லாது ஆவணப்படுத்த முடியாத நிலைமை உருவாகியிருக்கும். அந்த நிலைமையால் தமிழ்பேசும் மக்களின் வரலாறு எப்போதோ சிதைக்கப் பட்டிருக்கும் என்பதுதான் மறுக்க முடி யாத உண்மை.

தொழில்சார் ஊடகவியலாளர்களுக்கு ஊடகம் என்பது வெறுமனே கொடுப் பனவு பெற்றுக்கொள்ளும் பணி மாத்திரமன்று. அவர்கள் சமூகத்தின் நலனுக்காக தம்மை அர்ப்பணித் திருக்கிறார்கள். அந்தத் தியாகம் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை.

செய்திகளைச் சேகரிப்பது, அதனை உறுதிப்படுத்துவது, ஒழுக்க வியலுக்கமைய செம்மைப்படுத்தி எழுதுவது மாத்திரமல்லாது அவர்களது சிந்தனை எப்போதுமே மக்கள் சார்ந்ததாகவே இருக்கிறது. மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியே ஆட்சியாளர்களை அவர்கள் விமர்சிக்கிறார்கள்.

இங்கே, ‘தமிழன்’ பத்திரிகையைப் பொறுத்தவரையில் அந்தப் பொறுப்பை ஊடகவியாளர்கள் செம்மையாக நிறைவேற்றுகிறார்கள். கேள்விக்கணைகளைத் தொடுக்கும் ஊடகவியலாளர்களின் படங்களையும் பத்திரிகையில் பிரசுரித்து புதுமைகளைப் புகுத்தியிருக்கிறது ‘தமிழன்’.

‘தமிழன்’ பத்திரிகை, அச்சு வடிவிலும் இணையத்திலும் சமூக ஊடகங்களிலும் மிக நேர்த்தியாக பணிகளை முன்னெடுக்கிறது. மாற்றங்களால் ஆனது உலகு. மாற்றங்களைச் சுமக்காமல் காலத்தின் கைகளில் தவழ முடியாது என்பதே நிதர்சனம்.

நாம் மாற்றங்களோடு பயணிக்க விரும்புகிறோம். காலம் கடந்தும் தொடரும் எமது இருப்புக்கான களம் மக்களால் வழங்கப்பட்டிருக்கிறது. இனியொரு புதுவிதி இங்கிருந்து தொடங்குகிறது.

**நிர்ஷன் இராமானுஜம்**

## தமிழனுக்கு வாழ்த்துகள்




“தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா” கடந்த ஓராண்டு காலமாக தெள்ளத் தெளிவாக, துல்லியமான தகவல்களுடன் மக்களுக்கான செய்திகளை மிகவும் வெளிப்படையாக தெரிவித்த எங்கள் ‘தமிழன்’ பத்திரிகைக்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது எமது பாமா அமைப்பு. ஊடகத்துறையில் தமக்கென தனியிடம் பதித்து இன்னும் எங்கள் தமிழர்களின் வாழ்க்கையோடு இணைந்து ஆண்டாண்டு காலமாய் உங்கள் சேவை தொடரட்டும்.

**பாமா வின் அமைப்பினர்**



‘தமிழன்’ பத்திரிகை தனது முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த வேளையில், அப்பத்திரிகைக்கு வாழ்த்துச் செய்தி சொல்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். ‘தமிழன்’ பத்திரிகை இந்த ஒரு வருட காலத்தில் நாடெங்கிலும் வியாபித்து, ஏனைய பத்திரிகைகளுக்கு சமமானதாக திகழ்வது மகிழ்ச்சி தரக்கூடியதாக அமைகின்றது. இந்தப் பத்திரிகையில் பல்வேறு அம்சங்கள் காணப்படுகின்றன.

எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி, எல்லா பிரதேசங்களிலும் கிடைக்கக்கூடியதாக அமைவது மகிழ்ச்சி தருகின்றது. அதேவேளை, ஏனைய பத்திரிகைகளோடு ஒப்பிடுகையில் அதிக பக்கங்களைக்கொண்டதாக, ஒப்பு அடிப்படையில் சமமான விலையைக் கொண்டதாக இருக்குமாயின் இந்தப் பத்திரிகை மென்மேலும் வளர்ச்சியடைய வாய்ப்புகள் அதிகம் என்று மீண்டுமொரு முறை வாழ்த்து கூறுகிறேன்.

**எம்.வாமதேவன்**
**பேராசிரியர்**



‘தமிழன்’ பத்திரிகையின் ஓர் ஆண்டு நிறைவு குறித்து மிக்க மகிழ்ச்சி. தங்கள் துறையில் மென்மேலும் வளர எனது மனமார்ந்த ஆசீர்வாதங்கள்.

**பாரதி ஸ்ரீதர்**
**(ஜோதிட ஆலோசகர்)**



தனது முதலாவது ஆண்டு நிறைவை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற ‘தமிழன்’ பத்திரிகைக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ‘தமிழன்’ பத்திரிகையின் பிரதான ஆசிரியர்பீடம், பிராந்திய செய்தியாளர்கள், பக்க வடிவமைப்பாளர்கள், அச்சுப் பதிப்பாளர்கள், விற்பனை முகவர்கள், வாசகர்கள், விளம்பரதாரர்கள், ஆக்கங்களை அனுப்பும் என் சக எழுத்தாளர்கள், உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னணி பத்திரிகையாகத் திகழும் ‘தமிழன்’ பத்திரிகை இலங்கை தமிழ் ஊடக வரலாற்றில் ஒரு முக்கிய தடத்தினை பதித்துக்கொண்டிருக்கிறது. அதன் ஆசிரியர்பீடம் உட்பட அனைத்து ஊழியர்களும் தமது அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியதன் மூலம் இந்த ஓராண்டிலே மிகப்பெரிய இடத்தை பிடித்துள்ளனர்.

குறிப்பாக, தேசிய தமிழ்ப் பத்திரிகைகள் இத்தனை காலம் தமிழர்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் மூலைமுடுக்குகளுக்கு சென்றடையாத பகுதிகளுக்குக்கூட தமது காலை ஆழப் பதித்திருக்கிறது ‘தமிழன்’ பத்திரிகை. அந்த வகையில் பத்திரிகையின் செயற்பாடு மிகவும் வீரியம் மிக்கதாக இருக்கிறது. இது ஓர் ஆரோக்கியமான ஊடக சூழலை இலங்கையில் ஏற்படுத்தும் என நம்புகிறோம்.

சிரேஷ்ட எழுத்தாளர் களுக்கு மாத்திரமே களம் அமைத்துக் கொடுக்கின்ற இன்றைய தேசிய பத்திரிகைக ளிலிருந்து சற்று மாறுபட்டு என் சக இரண்டாம் நிலை எழுத்தாளர்கள், இளம் படைப்பாளர்கள், இளம் எழுத்தாளர்களுக்கு மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்பினை வழங்குகின்ற ‘தமிழன்’ பத்திரிகைக்கு நாங்கள் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். ‘தமிழன்’ பத்திரிகை நூறாண்டு மிகச் சிறப்பான சாதனையினை நிலைநிறுத்தும் நிலை நிறுத்த வேண்டும் என வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ப.கனகேஸ்வரன் (கே.ஜி.)**
**கவிஞர், சமூக செயற்பாட்டாளர்.**

# உலகம் முழுவதும் 70 நாடுகளை ஆக்கிரமித்த ‘டெல்ட்டா’ வைரஸ்

## பிரித்தானியாவில் 3ஆவது அலை; பிரதமர் பொரிஸ் ஜோன்சன் கவலை

‘டெல்ட்டா’ வகை உருமாறிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் 70 நாடுகளில் பரவி பாதிப்பை ஏற்படுத்தி வருவதுடன், இந்த வைரஸால் தற்போது பிரித்தானியாவில் 3ஆவது அலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், அங்கு பாதிப்புகள் அதிகமாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

**பிரதமர் பொரிஸ் கவலை**

பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அளித்த பேட்டியில்,

‘‘அடுத்த மாதம் 19ஆம் திகதிக்குள் அனைத்து ஊரடங்கு கட்டுப்பாடுகளும் தளர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது 3ஆவது அலை ஏற்பட்டுள்ளதால் எங்கள் இலக்கை எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது’’ என கவலை தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் இதுவரை 46,30,040 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 1,27,976 பேர் உயிரிழந்துள்ளனர். ஐரோப்பாவில் அதிக பலியை சந்தித்த நாடு பிரித்தானியா என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கடந்த ஒக்டோபர் மாதம் கண்டறியப்பட்ட டெல்ட்டா வகை உருமாறிய கொரோனா வைரஸ் அதிக வீரியமிக்கது. இந்த வகை வைரஸால் இந்தியாவில் 2ஆவது அலை தீவிரமடைந்ததுடன், இலட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். இப்போதுதான் 2ஆவது அலை படிப்படியாக குறைந்து வருகிறது. தற்போது, இந்த டெல்ட்டா வைரஸ் உலகம் முழுவதும் 70 நாடுகளில் பரவி பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பாக, இந்த வைரஸால் இங்கிலாந்தில் மூன்றாவது அலை உருவாகியிருக்கிறது. இந்த நாட்டில் முதல் மற்றும் 2ஆவது அலை ஓய்ந்து கொரோனா பாதிப்பு குறைந்திருந்த நிலையில், தற்போது டெல்ட்டா வைரஸால் 4 மாதங்களுக்குப் பிறகு பிரித்தானியாவில் தினசரி பாதிப்பு 11 ஆயிரத்தை தாண்டியுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் டெல்ட்டா வைரஸ் பிரித்தானியாவில் பரவி வருவதாக அந்நாட்டு மருத்துவ நிபுணர்கள் கூறிவந்த நிலையில் தற்போது தொற்று பரவல் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

அந்நாட்டின் தடுப்பூசி மற்றும் நோய் எதிர்ப்பு இணைக்குழுவின் ஆலோசகரான பேராசிரியர் ஆடம் பின் அளித்த பேட்டியில்,

‘‘பிரித்தானியாவில் அதிக வீரியம் கொண்ட டெல்ட்டா வகை வைரஸுக்கும், தடுப்பூசிக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. புதிய பாதிப்பு எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஆனாலும், இதன் வேகம் தீவிரமாக இல்லை என்றாலும், 3ஆவது அலை வந்துவிட்டது. பிரித்தானியாவில் பெரும்பாலான இளம் வயதினர் தடுப்பூசி பெற்றுள்ளனர். இனி முதியவர்களுக்கு விரைவில் தடுப்பூசி போடும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது’’ - என்றார்.



உலக செய்திகள்

## 18 கோடியை நெருங்கும் உலக கொரோனா பாதிப்பு

**தொடர்ந்தும் முன்னிலையில் அமெரிக்கா**

உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 18 கோடியை அண்மித்துள்ளது.

அந்தவகையில் உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 17.92 கோடியை கடந்துள்ளதுடன், உயிரிழப்புகளின் எண்ணிக்கை 38.82 இலட்சத்தை தாண்டியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிப்பகுதியில் கண்டறியப்பட்ட கொவிட்-19 வைரஸ் உலகம் முழுவதுமுள்ள 222 நாடுகள் மற்றும் பெரு நகரங்களை ஆக்கிரமித்து பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனா வைரஸ் பாதிப்பை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கொண்டவரப்பட்டுள்ளபோதிலும் நாளுக்கு நாள் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

கொரோனா பாதிப்பு மற்றும் இறப்பு விகிதங்களின்படி அமெரிக்கா, இந்தியா, பிரேஸில் ஆகிய நாடுகள் தொடர்ந்தும் முன்னிலையிலுள்ளன.


அந்தவகையில் உலகம் முழுவதும் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும்வரை) 17,92,78,498 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 38,82,610 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 16,38,39,706 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 1,15,56,182 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 82,512 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் கொரோனா பாதிப்பில் முதலிடத்துள்ள அமெரிக்காவில் 3,44,06,001 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 6,17,166 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு இந்தியாவில் 2,99,35,221 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3,88,164 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பிரேஸிலில் 1,79,27,928 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 5,01,918 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் செல்லப் பிராணியான ‘சாம்ப்’ என்ற நாய் உயிரிழந்துள்ளதாக அவர் தனது அதிகாரபூர்வ ட்விட்டர் பக்கத்தில் கவலை தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவில் அலபாமா பகுதியில் திடீரென அடுத்தடுத்து 15 வாகனங்கள் மோதிக்கொண்ட விபத்தில் 9 குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர்.





# அலைபேசியை அழிக்கும் 'ஜோக்கர்' வைரஸ்

'ஜோக்கர்' என்ற வைரஸ் மூலம் அலைபேசியிலுள்ள தகவல்கள் அனைத்தும் திருடப்படுவது மட்டுமன்றி, அலைபேசியே செயலிழக்கும் ஆபத்துள்ளதாக என்டிவைரஸ் நிறுவனம் எச்சரித்துள்ளது.

எண்ட்ராய்ட் அலைபேசிகளுக்கான பல செயலிகள் கூகுள் பிளே ஸ்டோரில் கிடைக்கின்றன. இவற்றில் சில வைரஸ் கொண்டவையாக உள்ளன. தற்போது ஜோக்கர் என்ற வைரஸ் 8இற்கும் மேற்பட்ட செயலிகள் மூலம் அலைபேசிகளில் ஊடுருவி தகவல்களை திருடுவது தெரியவந்துள்ளது.


கோ மெசேஜஸ், ப்ரீ கேம் ஸ்கேனர், பாஸ்ட் மேஜிக் எஸ்.எம்.எஸ்., சூப்பர் மெசேஜ், எலிமென்ட் ஸ்கேனர், ட்ராவெல் வோல்பேப்பர் போன்ற செயலிகள் மூலம் அலைபேசிக்குள் நுழையும் ஜோக்கர் வைரஸ், வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்குகள், ஓடிபி போன்றவற்றை திருடுகிறது. இந்த செயலிகளை பயன்படுத்துவோர் உடனடியாக அலைபேசியிலிருந்து நீக்கிவிடுமாறு க்யிக் ஹீல் என்டிவைரஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஈழத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை

## மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்

### தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தெரிவிப்பு

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க தேவையான சட்டங்களையும் சட்டத்திருத்தங்களையும் மேற்கொள்ளுமாறு இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தும்.



ஈழத் தமிழர்களுக்கு சம குடிமைசார் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதிசெய்திட, இலங்கை அரசை அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசு வலியுறுத்தப்படும் என தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 16ஆவது சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. தமிழக சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் புதிய பேரவையின் முதல் கூட்டத்தொடர் என்பதால், தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உரையாற்றி தொடக்கிவைத்தார்.

சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முதல் கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து உரையற்றுகையிலேயே ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய ஆளுநர்,

நடந்துமுடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 16ஆவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடரில் இங்கு கூடியிருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களாட்சியின் கலங்கரைவிளக்கமாகத் திகழும் இந்த மாமன்றத்தில் வீற்றிருக்கும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரிடமும் எதிர்பார்க்கப்படும் கடமைகளை, நீங்கள் ஒவ்வொருவரும் செவ்வனே நிறைவேற்றுவீர்கள் என உறுதியாக நம்புகிறேன்.

தமக்கு வாக்களித்தோர் என்றும், வாக்களிக்காதோர் என்றும் எந்த பாரபட்சமுமின்றி, தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்குமான அரசாக இந்த அரசு எப்போதும் செயற்படும். அனைவரையும் ஒருங்கிணைத்துச் செல்லும் இந்த அரசின் நெறிமுறைக்கேற்ப தொடர்புடையோர் அனைவரையும், அனைத்துத் தரப்பு மக்களையும், சட்டமன்றப் பேரவையிலுள்ள அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசித்து, கொவிட் பெருந்தொற்றினை எதிர்கொள்வது குறித்து இந்த அரசு திட்டமிட்டுள்ளது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி மறைந்து ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த அரசு பதவியேற்றுள்ளது.

மாநிலங்களுக்கு சுயாட்சி என்ற தனது தலையாய இலக்கினை எட்டவும், அரசியலமைப்புச் சட்டத்தின் வழிமுறைகளைப் பின்பற்றி உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை நிலைநிறுத்தவும், இந்த அரசு உறுதியாக உள்ளது. வலுவான மாநில அரசுகள் மூலமாகவே ஒரு வலிமையான ஒன்றிய அரசை உருவாக்கிட முடியும். இந்த அரசு மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியாக நிற்பதுடன், மாநில அரசுகளின் உரிமைகள் மீறப்பட்டால் அரசியலமைப்பின் துணையோடு அதை கடுமையாக எதிர்க்கும்.

அதேநேரத்தில், 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்ற கொள்கைக்கேற்ப நாட்டை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்லும் கூட்டு முயற்சியாளர்களாக ஒன்றிய அரசுடன் தொடர்ந்து நல்லுறவைப் பேணும்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க தேவையான சட்டங்களையும் சட்டத்திருத்தங்களையும் மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வற்புறுத்தும்.

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும்.

தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்பது குறித்து சட்டப்பேரவையில் பேசிய ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், தமிழ் மொழியின் பெருமையைப் போற்றும் வகையில், தமிழ் மொழியை இந்திய அலுவல் மொழிகளில் ஒன்றாக அறிவிக்க ஒன்றிய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்திய செய்திகள்

# கரும்பூஞ்சையால் மஹாராஷ்டிராவில் 729 பேர் பலி



மஹாராஷ்டிராவில் கரும்பூஞ்சை நோய்க்கு 729 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கொவிட் பெருந்தொற்றின் 2ஆவது அலையில் நோய்த் தொற்றிலிருந்து மீண்டவர்களை மியூகோர்மைகோசிஸ் என்ற கரும்பூஞ்சை பாதிக்கிறது. கொவிட் முதல் அலையில் இல்லாத கரும்பூஞ்சை, 2ஆவது அலையில் அதிகளவில் பாதிப்பை உண்டாக்குகிறது.

மஹாராஷ்டிரா சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மஹாராஷ்டிராவில் ஜூன் 19ஆம் திகதிவரை மொத்தம் 7,998 பேர் கரும்பூஞ்சையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில், 729 பேர் பலியாகியுள்ளனர். தற்போது 4,398 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

மஹாராஷ்டிராவில் அதிகபட்சமாக நாக்பூர் மாவட்டத்தில் 104 பேரும், புனேவில் 90 பேரும், ஔரங்காபாத்தில் 75 பேரும் கரும்பூஞ்சைக்கு உயிரிழந்துள்ளனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# சரியான வானிலை; சரியான துணை வேறு என்ன தேவை எனக்கு...



பெரும்பாலும் நடிகைகள் தங்களது போய்பிரண்டுகளுடன் கடற்கரைகளில் பிகினி அணிந்து குளியல் போடும் போட்டோக்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வருகிறார்கள். ஆனால், நடிகை கீர்த்தி சுரேசோ தற்போது கடற்கரையில் தனது செல்ல நாய்க்குட்டி 'நைக்'குடன் இணைந்து ஒரு போட்டோசூட் நடத்தியுள்ளார். அதை இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

அதில், செல்ல நாய்க்குட்டியை கட்டிப்பிடித்து, கைகோர்த்து கடற்கரை மணல் வெளியில் ஓடி பிடித்து கொஞ்சி விளையாடும் போட்டோக்களை வெளியிட்டுள்ளார். சரியான வானிலை, சரியான துணை, கடற்கரையில் சுற்றுலா. எனக்கு வேறு என்ன தேவை என்றும் பதிவிட்டுள்ளார் கீர்த்தி சுரேஷ்.

# மீண்டும் இணையும் ஒஸ்கர் கூட்டணி




Slumdog millionaire படத்தில் இடம்பெற்ற ஜெய் ஹோ பாடலுக்காக ஒஸ்கர் விருதுபெற்ற பாடலாசிரியர் குல்சாரும், இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானும் மீண்டும் ஒரு பாடல் ஆல்பத்திற்காக இணைந்துள்ளனர்.

Meri pukar suno என்ற குல்சார் பாடலுக்கு ரஹ்மான் இசையமைத்துள்ளார். இதன் டீசர் சமூக ஊடகங்களில் அதிகளவில் பகிரப்பட்டு வருகிறது.

You are on the right path, destined for success in the world of print media. Congratulation on this great occasion!

Happy Anniversary

FAITH - UNITY - DISCIPLINE
ESTD 1950



தேசபந்து
சஹீத் எம் ரிஸ்மி
தேசிய தலைவர்
அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை,
இல. 63, வஜிரஞான மாவத்தை,
கொழும்பு-9.
0777391691

Saheed M Rismy
National President
All Ceylon YMMA Conference
63, Sri Vajiragnana Mawatha,
Colombo 9.
077 739 1691

முதன்மை முன்னிலையான ஊடக தாற்பரியம் காத்த



'தமிழன்' பத்திரிகையின்

ஓராண்டு நிறைவுக்கு வாழ்த்துகள்...

1ST ANNIVERSARY

- பவதாரணி ராஜசிங்கம் -



ஊடகத்தில் அகம் பேணியதற்கு நன்றி

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## கிளிநொச்சியில் 60 கிராம் ஹெரோயினுடன் இருவர் கைது!

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் பகுதியில் 60 கிராம் ஹெரோயினுடன் இருவரை தர்மபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இரண்டு சந்தேக நபர்கள் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதையடுத்து அவர்கள் இருவரையும் பொலிஸார் சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து 60 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

அத்தோடு அவர்கள் பயன்படுத்திய இரண்டு சைக்கிள்களை கைப்பற்றியதுடன், சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், அவர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

## வவுனியா பொது வைத்தியசாலைக்கு விரைவில் 3.5 கோடி ரூபா பெறுமதியான பி.சி.ஆர். இயந்திரம்



(வவுனியா நிருபர்)

நாடு முழுவதும் தற்போது கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் வவுனியா மாவட்டத்தில் சுகாதாரப் பிரிவினர் மக்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்து வருகின்றனர். எனினும், வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் ஆய்வுகூடத்தில் மாத்திரமே பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுசெய்யும் இயந்திரம் உள்ளமையினால் பரிசோதனை முடிவுகளில் தாமதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பி.சி.ஆர். முடிவுகளை விரைவாக பெற்றுக் கொள்ளும் நோக்கில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகத்தினரால் பி.சி.ஆர். இயந்திரம் தொடர்பில் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதனடிப்படையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 3.5 கோடி ரூபா பெறுமதியில் பி.சி.ஆர் இயந்திரம் உட்பட பரிசோதனை வசதிகளை ஏற்படுத்தித் தர சுகாதார அமைச்சு முன்வந்துள்ளது.

அந்தவகையில் இதனை அமைப்பதற்குரிய வசதிகள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் காணப்படுகின்றதென்பதை ஆராயும் நோக்கில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் (ஆய்வுகூட சேவைகள்) வைத்தியகலாநிதி சுதத் தர்மாரட்ன நேற்று வைத்தியசாலையினை பார்வையிட்டார்.

வைத்தியசாலையின் இடங்கள், வசதிகள் என்பவற்றினை வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையின் பணிப்பாளர் கலைநாதன் ராகுலன் காண்பித்ததுடன், பி.சி.ஆர். இயந்திரம் இன்மையினால் சுகாதாரப் பிரிவினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

## வருட இறுதிக்குள் தேவன்பிட்டிக்கு வளமான வாழ்வாதாரம்

### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்

தேவன்பிட்டி மக்களுக்கான வளமான வாழ்வாதாரத்தை இந்த வருட இறுதிக்குள் ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடலட்டை பண்ணைகளை அமைக்க விரும்புகின்றவர்கள் ஒரு மாத காலத்தினுள் அமைத்துக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

மன்னார், தேவன்பிட்டி கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்குறித்தவாறு தெரிவித்துள்ளார்.

இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் கருத்துகளை முன்வைத்த பிரதேச மக்கள், ஏற்றுமதி நோக்கத்திலான நண்டு, கணவாய் போன்ற தொழிலை பெருமளவில்



மேற்கொண்டு வருவதாகவும் அதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதனால் மாற்றுத் தொழிலுக்கான மீன்வலைகளைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

அதைவிட சுமார் 65 பேர் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்குஆர்வமாக இருப்பதாகவும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு தருமாறும் கேட்டுக்கொண்டனர்.

அதேபோன்று பல்வேறு அடிப்படைத் தேவைகள் தொடர்பான கோரிக்கைகளும் பிரதேச மக்களினால் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையிலேயே தற்போதைய அரசியல், பொருளாதார சவால்கள் தொடர்பாக எடுத்துக்கூறிய கடற்றொழில் அமைச்சர், மக்களுக்கான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

அதுவேளை, தேவன்பிட்டி கிராமத்தில் சுமார் 52 பெண் தலைமைத்தவக் குடும்பங்கள் வாழ்ந்துவருகின்ற நிலையில், அவர்களுக்கான வாழ்வாதாரம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று தெரிவித்த மாதர் அமைப்பின் பிரதிநிதிகள், ஏனைய குடும்பப் பெண்களும் பொருளாதார நன்மைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் குறித்த திட்டம் அமையவேண்டும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






# முதலாம் ஆண்டிலிருந்து... முதல்தரத்தை நோக்கி...

## தமிழனின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு பிரமுகர்களின் வாழ்த்துகள்



தமிழன்' பத்திரிகையின் திடமும், தேடலும் எதிர்காலத்திலும் உறுதியோடு தொடரவேண்டும் என்று மகிழ்ச்சி நிறைந்த சந்தர்ப்பத்தில் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

உண்மைக்குப் புறம்பான செய்திகளையும், ஊகச் செய்திகளையும் உப்பு, புளி, காரம் சேர்த்து செய்திகள் என்ற போர்வையில் இலத்திரனியல் ஊடகங்களிலும், சமூகத் தளங்களிலும் தகவல்களைப் பரப்புரை செய்யும் சூழலிலும் முடியுமானவரை மக்களுக்குத் தேவையான செய்திகளைத் திரட்டித் தருவதில் ‘தமிழன்’ செய்திகள் கணிசமான பணியைச் செய்திருப்பதாகவே நம்புகின்றேன்.

அந்தத் திடமும், தேடலும் எதிர்காலத்திலும் உறுதியோடு தொடரும் என்ற நம்பிக்கையிலும், எதிர்பார்ப்புகளுடனும் இந்த மகிழ்ச்சி நிறைந்த சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**டக்ளஸ் தேவானந்தா,**
**கடற்றொழில் அமைச்சர்.**



ஓராண்டு காலத்திற்குள் ‘தமிழன்’ பத்திரிகையின் செல்வாக்கு, வாசகர்கள் மத்தியில் அபாரமாக அதிகரித்திருப்பதையிட்டு அகம் மகிழ்கிறேன்.

‘தமிழன்’ முதலாவது வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கும் கிட்டியிருந்தது. அன்றிலிருந்து இன்றுவரை வெளிவரும் பத்திரிகைகளின் உள்ளடக்கத்தையும், அரசியல், சமூக, பொருளாதார, சர்வதேச மற்றும் பல்சுவை அம்சங்களையும் உற்று நோக்கும்போது அவை மிகவும் விறுவிறுப்பானவையாகவும், தரமானவையாகவும், இலக்கண சுத்தமானவையாகவும் இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அச்சு, இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களைப் பொறுத்தவரை அவற்றிற்கிடையே பலத்த போட்டி நிலவுகின்ற காலகட்டத்தில் நம்பகத்தன்மையுடன், பக்கச்சார்பின்றி, நடுநிலை பேணி, விடயங்களைச் சுடச்சுட எத்திவைப்பது இன்றியமையாதது என்பதற்கு ‘தமிழன்’ சான்று பகிர்கின்றது.

கொவிட்- 19 நோய்த் தொற்றின் தாக்கத்திற்கு மத்தியிலும், பத்திரிகையின் வளர்ச்சியில் பிரதம ஆசிரியர் நண்பர் சிவராஜாவோடு ஒருங்கிணைந்து, சிறப்பாக ஒத்துழைக்கும் ஆசிரிய பீடத்தினருக்கும், ஏனைய ஊழியர்களுக்கும், நிறுவனத்தின் உரிமையாளருக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ரவூப் ஹக்கீம்,**
**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்.**



குறுகிய காலத்தில் மிகச்சிறந்த அடைவை நோக்கி தன்னுடைய பாதத்தை ஊடகப்பரப்பில் வைத்து இன்றுடன் ஓராண்டை பூர்த்திசெய்திருக்கும் 'தமிழன்' நாளிதழுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன்.

தேடலுடன் கூடிய துடிப்புள்ள ஊடக தேனீக்களைக் கொண்டுள்ள இந்த நாளிதழ், விரைவாகவும் வினைத்திறனுடனும் செய்திகளை வெளியிட்டு குறுகிய காலத்தில் மிகப்பெரும் வாசகர் வட்டத்தை தனதாக்கியுள்ளது. இந்தக் காலகட்டங்களில் ஊடகங்களின் அவசியத்தை உணர்ந்து பிந்திய செய்திகளையும் முந்திக்கொண்டு மக்களுக்கு வழங்கும் பணியை வெற்றிகரமாக செய்துவரும் ‘தமிழன்’ பத்திரிகை ஊடகப்பரப்பில் நூற்றாண்டு காண பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் (பா.உ.)**
**முன்னாள் இராஜாங்க அமைச்சர்**
**பிரதித்தலைவர் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**



தமிழன் பத்திரிகை கடந்த ஓராண்டு காலத்திற்கும் மேலாக இலங்கையில் நிலவி வரும் பல்வேறு இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியிலும் அவற்றிக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து தனது ஓராண்டு நிறைவை பூர்த்தி செய்து அதனை வெகு கோலாகலமாக கொண்டாடி வரும் இத் தருணத்தில் ஊடகத்துறையானது இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றது. அதேவேளை ஊடக சுதந்திரம் என்பதும் இன்று ஒரு கேள்விக்குறியாக மாறியுள்ள இச் சூழ்நிலையில் பணத்துக்கும், பலத்துக்கும் மற்றும் ஏனைய வெளிக் கட்டுப்பாடுகளுக்கும் அடிபணியாது சாதாரண பொது மக்களின் தோழனாக இன, மத பேதமின்றி, பக்கச் சார்பற்ற, நடுநிலையான சேவை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அவற்றை நிறைவேற்ற தேவையான நம்பிக்கையையும், சக்தியையும், மன தைரியமும், இறை ஆசியும் தமிழன் பத்திரிகை நிறுவனமும், தமிழன் பத்திரிகையும், அதன் பிரதம ஆசிரியர் மற்றும் சக ஊழியர்களுக்கும் பெற்று தமிழன் பத்திரிகையின் சேவைகள் மென்மேலும் பல்லாண்டு, பல்லாண்டு காலம் சிறந்து விளங்க ‘தமிழன்’ பத்திரிகைக்கு எனது இதயபூர்வமான நல்வாழ்த்துகளை வெற்றிகரமான ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வதில் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

**இம்தியாஸ் பாக்கீர் மாக்கர்**
**ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் மற்றும் தேசிய ஊடக மத்திய நிலைய தலைவர்.**



நமது அறிவை வளர்க்க வழிசெய்கின்ற வகையில் பத்திரிகைகள் மனிதனை ஆளுகை செய்கின்றன. இந்த நாளேடுகள் இன்றைய நவீன தொழில்நுட்பத்தை தன்னுள் புகுத்தி நாட்டில் மற்றும் உலகில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை விளக்கங்கள், விவரங்கள், விமர்சனங்களை தந்து காலத்தின் கண்ணாடியாக செயற்படுகின்றன.

தமிழ் பேசும் மக்களின் மனம் கவர்ந்த ‘தமிழன்’ பத்திரிகை உண்மையுடன் முந்திக்கொண்டு தமிழன் எனும் மிடுக்கோடு நடுநிலையாக செயற்படுகின்றது. விட்டுக்கொடுக்கும் உண்மை நீதியின் குரலாய் செயற்படும் இந்தத் தமிழ் குழந்தை, முதலாம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கின்றது. பத்திரிகைப் பணி தரணியெங்கும் பல்லாயிரம் ஆண்டு நிலைக்க மனம் நிறைந்த நல்வாழ்த்துகள்.

**தவராசா கலையரசன்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - அம்பாறை**



ஜனநாயக கருத்துகளுக்கும் மக்களின் கருத்துகளுக்கும் முதலிடம் வழங்கும் முதல் தரப் பத்திரிகையாக ஊடகத்துறையில் மென்மேலும் சாதனைப் படைக்க இறைவனைப் பிரார்த்திப்பதுடன், வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திரிகைத்துறையில் தடம் பதித்த குறுகிய காலத்தில் மக்கள் மத்தியில் இடம்பிடித்து, இன்று தனது ஒரு வருடப் பூர்த்தியை வெற்றிகரமாகக் கொண்டாடும் ‘தமிழன்’ பத்திரிகைக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுக்கு நம்பிக்கையான செய்திகளை வழங்கும் சிறந்த பத்திரிகையாக விளங்க வேண்டும். ஜனநாயக கருத்துகளுக்கும் மக்களின் கருத்துகளுக்கும் முதலிடம் வழங்கும் முதல் தரப் பத்திரிகையாக ஊடகத்துறையில் மென்மேலும் சாதனைப் படைக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நவீன ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள போட்டித்தன்மையின் மத்தியில் பத்திரிகைத்துறைக்கென தனி இடத்தைப் பிடித்துள்ள ‘தமிழன்’ பத்திரிகைக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்.**



‘தமிழன்’ நாளிதழ் இன்று அகவை ஒன்றில் காலடி எடுத்துவைத்துள்ளது. இத்தருணத்தில் ‘தமிழன்’ பத்திரிகை முதலாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதில் பெருமகிழ்வடைகிறேன். இந்த ஒரு வருட காலத்திற்குள் மக்கள் மனங்களை பெரிதும் கவர்ந்துவிட்டது. வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மாத்திரமன்றி ஒட்டுமொத்த தமிழ் மக்கள் மத்தியிலும் ‘தமிழன்’ என்ற பெயர் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பெயருக்கு ஏற்றவாறு தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் ஊடகமாக தொடர்ந்தும் ‘தமிழன்’ இருக்கும் என்பதனை இந்த ஓராண்டு காலத்திற்குள் வெளிவந்த ஆக்கங்கள் மற்றும் செய்திகள் நிரூபித்துள்ளன.

அச்சு ஊடகங்களுக்கு சவால்விடும் வகையில் நவீன உலகில் இணையத்தள ஊடகங்கள் உருவாகி வருகின்றபோதிலும் அச்சு ஊடகங்களில்தான் மக்கள் மத்தியில் இன்றும் நம்பகத்தன்மை அதிகம் காணப்படுகிறது.

பாமர மக்கள் நாடுவதும் அச்சு ஊடகங்களைத்தான். அந்த நம்பிக்கையை அச்சு ஊடகங்கள் காலாகாலத்திற்கும் கட்டிக்காக்க வேண்டும். ‘தமிழன்’ நாளிதழ் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஓங்கி ஒலிக்கவேண்டும். மக்களின் அமோக ஆதரவுடன் நூற்றாண்டு விழா காண எனது வாழ்த்துகள்.

**அங்கஜன் இராமநாதன் - (பா.உ.)**
**நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளர்,**
**யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்.**



‘தமிழன்’ பத்திரிகையின் துணிச்சல்மிக்க பணி தொடரட்டும். இரண்டாவது ஆண்டிலும் தனித்துவமான வழியில் பயணித்து தமிழர்களுக்காக உரத்துக் குரல் கொடுக்கவேண்டும்.

தமிழர்களின் தனித்துவத்தையும் அவர்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் உரக்கச் சொல்லும் வகையில், தனித்துவமாக பயணிக்கும் ‘தமிழன்’’ பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

சவாலான காலப்பகுதியில் ஆரம்பமான ‘தமிழன்’ பத்திரிகை தொடர்ந்தும் தடைகளை தகர்த்தெறிந்து தனிப்பாதையில் வீறுநடை போடுகின்றது. ‘தமிழன்’ பத்திரிகைச் செய்திகளை அலசி ஆராய்ந்து, உண்மையை உறுதிசெய்து செய்திகளை வெளியிட்டு வருகின்றமை வரவேற்கத்தக்கது.

பத்தோடு பதினொன்றாக இல்லாமல் அனைத்துவகை செய்திகளையும் தனித்துவமாய் அச்சமின்றி வெளியிட்டு வருவதை ‘தமிழன்’ பத்திகையை வாசிக்கும் வாசகர்கள் அனைவரும் உணர்வார்கள்.

‘தமிழன்’ பத்திரிகை ஊடகவியலாளர்களின் துணிச்சல், செய்தி தேடல், உண்மையை பகுத்தாய்வு செய்யும் திறன் என்பன குறுகிய காலத்திற்குள் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதேபோன்று இரண்டாவது ஆண்டிலும் தனித்துவமான வழியில் பயணித்து தமிழர்களுக்காக உரத்துக் குரல் கொடுக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

‘தமிழன்’ பத்திரிகையின் தலைமைத்துவ அதிகாரிகள், ஆசிரியர் பீட அதிகாரிகள் மற்றும் அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் பிறந்தநாள் வாழத்துகள். ‘தமிழன்’ பத்திரிகையின் துணிச்சல்மிக்க பணி தொடரட்டும்.

**அ.அரவிந்தகுமார்,**
**பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.**



ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடும் ‘தமிழன்’ பத்திரிகையின் அளப்பரிய ஊடக சேவையை மனதார மெச்சுகிறேன். தமிழ்மொழியிலான பத்திரிகை ஊடகப் பரப்பில் பல்வேறு பழம்பெரும் பத்திரிகைகள் வெளிவந்தாலும் மிகக் குறுகிய ஓராண்டுக்குள் பத்திரிகைத்துறையில் புதிய புரட்சியை படைத்து, பல்லாயிரம் வாசகர்களை தன்னகத்தே ஈர்த்துள்ளது.

பாரம்பரிய செய்தி நுட்பங்களை விடுத்து புதிய பல நுட்பங்களையும் நுணுக்கங்களையும் ‘தமிழன்’ பத்திரிகை கையாள்வதை அதை வாசிக்கும் வாசகன் என்றவகையிலும் ஓர் ஊடகவியலாளன் என்ற ரீதியிலும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

திறமையான எழுத்தாளர்கள், வெற்றிகரமான நிர்வாக கட்டமைப்பு போன்றவற்றோடு ‘தமிழன்’ இயங்குகிறது என்பதை தமிழனின் பத்தி எழுத்துகள், ஆசிரியர் தலையங்கங்கள், பத்திரிகையின் நேர்த்தியான பக்க ஒழுங்கமைப்பு, வடிவமைப்பு என பல்வேறு அம்சங்கள் புடம்போடுகின்றன.

அவை மட்டுமல்லாமல், உடனுக்குடனான விரைவான செய்திகளைத் தாங்கிவரும் ‘தமிழன்’ நிரப்பமான விடயங்களை தணிக்கைகளின்றி வாசகர்களுக்கு வழங்கி வருகின்றமை அருமையானது.

நாட்டின் தேசிய பத்திரிகைகளில் ஒன்றாகவும் குறிப்பாக, தமிழ் பேசும் மக்களின் தளராத தனித்துவக் குரலாகவும் தன்னை அர்ப்பணித்து பத்திரிகை பணியாற்றும் ‘தமிழன்’ பத்திரிகையை பாராட்டாமல் இருக்கமுடியாது.

இன்று ஒரு வருட பூர்த்தியை வெற்றிகரமாக கொண்டாடும் ‘தமிழன்’ பத்திரிகையையும் அதன் நிர்வாக கட்டமைப்பினரையும் மனதார மெச்சுவதோடு, தொடர்ந்தும் திடமான பத்திரிகை பணியாற்ற மகிழ்வான வாழ்த்துகளையும் பகிர்கிறேன்.

**முஷாரப் - பா.உ.**
**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்.**



தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமை காவலனாய் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும் ‘தமிழன்’ பத்திரிகை ஓராண்டை பூர்த்திசெய்தாலும், அதன் வளர்ச்சி அதைவிட அபரிமிதமானது. பத்திரிகையை வாசிக்காவிட்டால் அன்றைய நாள் பூர்த்தியாகவில்லை என்று எண்ணும் அளவுக்கு மக்கள் மனதில் போதை ஏற்றியுள்ளது. காரணம், உண்மையான செய்திகளைக் கொண்டுவருவதில் ‘தமிழன்’ தனக்கான இடத்தைப் பிடித்துள்ளது.

ஏனைய பத்திரிகைகளில் வெளிவராத செய்திகள் தமிழனில் மிகவும் விளக்கமாக இடம்பெறுகின்றமை அதன் ஊழியர்களின் அர்ப்பணிப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பிரதான, பிரதேச, விளையாட்டு, சினிமா மற்றும் அரசியல் செய்திகள் நேர்த்தியான முறையில் காணப்படுவதுடன், அதன் வடிவமைப்பும் பத்திரிகையை வாசிப்பதற்கு இலகுவாகவும், அழகாகவும் அமைந்திருக்கிறது.

கொரோனா காலகட்டத்திலும் இலத்திரனியல் வடிவில் பத்திரிகையை வாசகர்களிடத்தில் கொண்டுசென்றமை மிகவும் வரவேற்கத்தக்கது. இப்பத்திரிகை மேலும் வளர, இதன் உயர்வுக்காக பாடுபடுகின்ற அனைத்து ஊழியர்களையும் மனதார வாழ்த்துகிறேன்.

**அஸ்மி யாஸீன்**
**திட்டப் பகுப்பாளர்.**
**ஆசிய அபிவிருத்தி வங்கி**



தமிழ் பேசும் மக்களின் அமிர்தமாக ‘தமிழன்’ பத்திரிகை கடந்த ஒரு வருடமாக வீறுநடைபோட்டு வருகிறது. இதன் வளர்ச்சிக்கும், ஜனரஞ்சக கவர்ச்சிக்கும் ‘தமிழன்’ எதிர்காலத்திலும் மேலும் வீறுநடைபோட்டு வெற்றியுடன் மிளிர வாழ்த்தி வரவேற்பதோடு, ‘தமிழன்’ வாரஇதழ் நமது பண்பாட்டு அம்சங்களை மீளுருவாக்கும் நிலையமாக நிலைத்திருக்கவும், வழிவகுக்க எதிர்பார்க்கின்றோம்.


**கலாபூஷணம் எஸ்.அப்துல் றாஸீக்**
**(ஓய்வுபெற்ற அதிபர்)**
**தலைவர், தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கலாசாலை, சம்மாந்துறை.**

# முதலாம் ஆண்டிலிருந்து...



# முதல்தரத்தை நோக்கி...

## 'தமிழனின்' ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு பிரமுகர்களின் வாழ்த்துகள்



மிக நீண்ட இலக்கை நோக்கிய ஊடகப்பரப்பில் ஓராண்டை வெற்றிகரமாக பூர்த்திசெய்து, நேர்த்தியாக நகர்ந்து கொண்டிருக்கும் 'தமிழன்' நாளேட்டுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் அகம் மகிழ்கின்றேன் .

ஊடகத்தின் தேடலில் தனித்துவமான பாணியை உருவாக்கி குறுகிய காலத்திற்குள் மிகப்பெரிய வாசகர் வட்டத்தை தனதாக்கியுள்ள 'தமிழன்' நாளிதழ்,

தமிழ் பேசும் மக்களின் முரசாகவே அமைந்து, ஆனந்த தமிழில் செய்திகளை அலங்காரமிடும் பணியை பாராட்டுகிறேன்.

நடுநிலை, நம்பகம், உண்மைத்தன்மை நீடித்த பத்திரிகையாக பயணம் தொடரவேண்டியும், நல்ல அடைவுகள் வந்தடையவும் பிரார்த்தித்து ஓராண்டு பூர்த்தியை மகிழ்வுடன் கொண்டாடும் தமிழன் குடும்பத்தினர் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.எல்.எம்.அதாஉல்லா**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**தலைவர், தேசிய காங்கிரஸ்.**



ஒரு வருட காலத்திற்குள் தமிழ் பேசும் மக்களின் இதயத்தில் இடம்பிடித்த 'தமிழன்' பத்திரிகை சாதனை படைத்த வரலாறாகும்.

நமது நாட்டில் மூவின மக்களும் வாழ்கின்றனர். அதனால் அம்மக்களுக்கிடையில் பிளவு ஏற்படாமல் அம்மக்களுக்கிடையில் சகோதரத்துவம், தன்னம்பிக்கை சமாதானத்தை ஏற்படுத்தும் பொறுப்பு 'தமிழன்' பத்திரிகைக்கு உள்ளது. பத்திரிகை நடுநிலை வகித்து செயற்பட வேண்டும். அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டறிந்து மக்களுக்கு உண்மையான தகவல்களை வழங்குவது பத்திரிகையின் கடமையாகும்.

இந்த நாட்டிலுள்ள இனவாத அரசியல்வாதிகள் யார் என்பதை அறிந்து தமிழ்பேசும் மக்களுக்குச் சுட்டிக்காட்டவேண்டும். இவ்வாறான கட்சிகளால்தான் இனங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்தத் தடையாக உள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கத்தினால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். கொரோனா நோயினால் எம்மை எப்படிப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என சுகாதார அறிவுறுத்தல்களைச் சுட்டிக்காட்டவேண்டிய பொறுப்பு பத்திரிகையைச் சாரும்.

தமிழ்ப் பத்திரிகை செய்தியின் மூலம் நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென வாழ்த்துகிறேன்

**பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண,**
**லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்.**



'தமிழன்' நாளிதழ் முதலாவது ஆண்டில் இன்று காலடி எடுத்து வைக்கின்றது. தமிழர்கள் அனைவரும் விரும்பிப் படிக்கும் பத்திரிகையாகத் திகழ்கின்றது. வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்களும் ஆர்வத்துடன் 'தமிழன்' நாளிதழை படிக்கின்றனர். கொரோனா தொற்று காலகட்டத்திலும் பயணத் தடை சமயத்திலும் அனைத்து செய்திகளை உள்ளடக்கி அனைத்துத்தரப்பு மக்களும் விரும்பிப் படிக்கும் பத்திரிகையாக 'தமிழன்' விளங்குகிறது. குறிப்பாக அரசியல் நிகழ்வுகளை பாரபட்சமின்றி மக்களுக்கு படம்பிடித்துக் காட்டும் நாளிதழ். இது ஜனநாயகத்தின் தூணாக சுதந்திரமாக செயற்பட்டு தன் பணியை செம்மையாக செய்துவருகிறது.

இன்று சமூதாயத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான நாளிதழ் போட்டியில் தொடர்ந்தும் முன்னணி நாளிதழாக வளர 'தமிழன்' நாளிதழுக்கும் நிர்வாகத்தினருக்கும் ஊழியர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**குலசிங்கம் திலீபன்**
**வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்**



இலங்கையில் இருக்கின்ற தமிழ்ப் பத்திரிகைகளில் 'தமிழன்' பத்திரிகை குறுகிய காலத்தில் மிகப்பெரிய சாதனையாற்றியுள்ளதாகவே நான் கருதுகிறேன். மிக முக்கியமாக தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற அநீதிகளையும் தமிழர்களுக்கெதிரான விடயங்களையும் உடனுக்குடன் செய்திகளாக தருகின்ற 'தமிழன்' பத்திரிகை இன்று இலங்கையின் பல்வேறுபட்ட பாகங்களிலும் தன்னுடைய கால்களை பதித்திருக்கின்றது.

அதன் ஆசிரியர், ஊடகவியலாளர்கள் மற்றும் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் அனைவரையும் நாங்கள் இந்த ஓராண்டு பூர்த்தியில் பாராட்டுவதுடன், 'தமிழன்' பத்திரிகை இன்னும் சீரோடும் சிறப்போடும் கிளை பரப்பி இந்த மண்ணில் தன்னுடைய வளர்ச்சியை மேலோங்கச் செய்யவேண்டும். நல்ல செய்திகளை, நேர்மையான செய்திகளை உடனுக்குடன் மக்கள் நம்பக்கூடிய வகையிலும் வழிநடத்தக்கூடிய வகையிலும் தன்னுடைய பணியை உடனுக்குடன் கொண்டுவரவேண்டும் என இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**
**இலங்கை தமிழரசுக் கட்சி**



கொரோனா காலத்தில் அச்சுப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வது சிரமமான காரியமாகிவிட்டதால் அநேகமாக அனைத்துப் பத்திரிகைகளையும் இலத்திரனியல் பிரதிகளாகவே படிக்க நேர்கின்றது.

'தமிழன்' பத்திரிகையின் இலத்திரனியல் பதிப்புகளையும் வாசிக்கக் கிடைத்தது.

செய்தித்தளத்துடன் மேலும் அதிகமான ஆய்வுகளையும் உள்ளடக்கி 'தமிழன்' பத்திரிகை தொடர்ந்து சிறப்புற பயணிக்கவேண்டுமென்று 'தமிழன்' பத்திரிகையின் இரண்டாம் ஆண்டு ஆரம்பத்தில் எனது வாழ்த்துகளையும் பகிர்ந்துகொள்கின்றேன்.

**வஃபா பாறுக்,**
**கோட்பாட்டாளர்.**



தமிழ்பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன் 'தமிழன்' பத்திரிகை முதலாவது ஆண்டு கொண்டாடுவதையிட்டு நல்வாழ்த்துகள் நவில்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கொரோனா காலத்தில் பிறந்த 'தமிழன்' பத்திரிகை, இடர் காலத்தில் பிறந்திருக்கக் கூடிய பத்திரிகை எழுச்சி பெறுமா என்று எல்லோரும் ஏங்கினார்கள். ஆனால், 'தமிழன்' சாதித்துக் காட்டினான். ஓராண்டில் மின்பத்திரிகையாகவும் அச்சுப் பத்திரிகையாகவும் தன்னை நிலைநிறுத்தி இன்று வீறுநடை போடுகின்ற ஒரு பத்திரிகையாக இருப்பதை பார்க்கிறோம்.

இலக்கியமாயினும் சரி, அரசியலாயினும் சரி இப்படியாக சமூகத்திற்கு என்ன தேவையோ அதை கொண்டுவந்து நிறுத்துகிற ஒரு கருத்துரிமைக் காவலனாக 'தமிழன்' வளர்ச்சிபெறுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழன் குழுமத்துக்கு என்னுடைய நல்வாழ்த்துகளை யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் நவில்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

**சந்திரமௌலீசன் லலீசன்**
**'செந்தமிழ்ச் சொல்லருவி'**
**யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் தலைவர்**



கொரோனா காலகட்டத்தில் அச்சு ஊடகங்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. இந்த டிஜிட்டல் மயமாக்கல் மூலம் அச்சு ஊடகங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில், 'தமிழன்' பத்திரிகையின் வருகையானது சற்று ஆறுதல் அளித்துள்ளது.

தற்போதுள்ள சவால்களுக்கு மத்தியில் இலங்கையில் ஒரு பத்திரிகையை கொண்டுசெல்வதென்பது பெரும் இடராகும். 'தமிழன்' பத்திரிகையின் வருகையானது பல இளம் ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

பத்திரிகையுடன் சார்ந்து சமூக ஊடகங்களையும் கொண்டுசெல்லும்போது எதிர்காலத்தில் 'தமிழனுக்கு' ஒரு தனியான இடம் கிடைக்கும் என்பதுடன், எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.அருண்,**
**ஆசிரியர், க்ளோப் தமிழ்.**



கடந்த ஒரு வருட காலப்பகுதியில் அச்சு ஊடகத்துறையில் தமிழ்பேசும் மக்களுக்கு நடுநிலையான செய்திகளை 'தமிழன்' பத்திரிகை மிகச் சிறப்பாக வழங்கி வருகிறது. அது மட்டுமல்லாமல், மக்களின் குறைகளைக் கண்டறிந்து அவற்றை உரிய அதிகாரிகளிடம் கொண்டுசேர்க்கின்ற பணியையும் 'தமிழன்' பத்திரிகை சிறப்பாக செய்துவருகிறது. இன்று ஒரு வருட பூர்த்தியைக் கொண்டாடும் 'தமிழன்' பத்திரிகைக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், அடுத்துவரும் காலங்களில் தங்களது பணியை இன்னும் சிறப்பாக மேற்கொள்ள எனது வாழ்த்துகள்.

**எம்.ஐ.எம்.கலீல்,**
**பேராசிரியர்,**
**புவியியல்துறை, இலங்கை**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**



மலையகத்தில் நடக்கும் கலை, கலாசார, அரசியல் செய்திகளை பக்கச்சார்பின்றி மக்களுக்குத் தெரிவிக்கும் ஒரு சிறந்த ஊடகமாக 'தமிழன்' பத்திரிகை விளங்குகின்றது.

மலையகம் மற்றுமல்லாமல் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பெரும் வரவேற்பைப் பெற்ற ஊடகமாக விளங்குகின்றது. ஓராண்டு பூர்த்தியாகி இரண்டாம் ஆண்டில் தடம் பதிக்கும் 'தமிழன்' பத்திரிகைக்கு எனது மனமார்ந்த நன்றிகள், வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ராமன் கோபால்**
**அக்கரப்பத்தனை பிரதேச சபை உறுப்பினர்.**



உண்மை நிகழ்வுகளை நாளாந்தம் நடுநிலையுடன் மக்களுக்கு கொண்டுவந்து சேர்க்கும் 'தமிழன்' பத்திரிகை தனது முதலாவது ஆண்டு நிறைவை காண்பதை முன்னிட்டு பேரானந்தம் அடைகின்றேன்.


மக்களின் அறிவுக்கண்ணை திறக்கும் உயரிய பணியை ஆற்றுவதால் பத்திரிகைத்துறை ஜனநாயகத்தின் மற்றொரு தூணாக போற்றப்படுகிறது.

இத்தகைய சிறப்புமிக்க மகத்தான பணியை கடந்த ஒருவருட காலமாக 'தமிழன்' பத்திரிகை செய்துவந்திருக்கின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒவ்வொரு ஊடகவியலாளரும் போற்றி பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இன்றைய இந்த மகத்தான நாளில், தமிழனின் நிறுவுனரும், நிறுவன ஊழியர்களும் நினைவு கூரப்படவேண்டியவர்கள். அவர்களின் அர்ப்பணிப்பும் தியாகமுமே 'தமிழன்' மக்களின் மனங்களில் உயர்ந்து நிற்கக் காரணமாகும். அவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்வரும் காலங்களிலும் 'தமிழன்' நாட்டு மக்களின் நாடிபிடித்து உண்மைக்கு உண்மையான செய்திகளை கொண்டுசேர்ப்பதில் முன்னிலை வகிக்கவேண்டும் என பிரார்த்தனை செய்கின்றேன்.

**பீ.எம்.சிபான்**
**கல்முனை மாநகரசபை உறுப்பினர்**



இலங்கையில் வெளிவரும் 'தமிழன்' பத்திரிகை, தனது முதலாம் ஆண்டை வெற்றிப்பாதையில் நிறைவேற்றி இலங்கையில் மட்டுமல்ல, உலகமெங்கும் இணையவழி வாயிலாக வெளியாவதும், தமிழர்கள் கரங்களில் தவழ்வதும் மகிழ்ச்சிக்குரியது.

தமிழ்நாட்டிலும் இன்று 'தமிழன்' பத்திரிகை அனைவர் மத்தியிலும் இணையத்தின் வாயிலாக வலம் வருவது மகிழ்ச்சியளிக்கின்றது. இப்பத்திரிகை மேலும் வளர்ந்து உலகத் தமிழர்கள் மத்தியில் வலம் வர வாழ்த்துகள்.

**மணவை அசோகன்**
**இலங்கை - இந்திய தொடர்பாளர்**



உலகத் தமிழர்கள் மத்தியில் வீறுநடை போட்டு வரும் 'தமிழன்' பத்திரிகை தனது ஓராண்டை நிறைவடைந்த நாளை எண்ணி மகிழ்கின்றேன். இப்பத்திரிகை மேலும் பல்லாண்டுகள் நிலைபெற வாழ்த்துகின்றேன்.

**வி.கே.டி.பாலன்**
**மதுரா டிராவல்ஸ் நிறுவுனர்**
**சென்னை, தமிழ்நாடு**

## தமிழனுக்கு என் வாழ்த்து

*தமிழ்ச் சொல் கொண்டு*
*தமிழர் மனம் கொள்ளை அடிக்கும்*
*தமிழன் நாளிதழே,*
*தமிழனாய் உன் ஓராண்டு விழாவில்*
*தமிழால் கவி வடிக்கும் எனக்கும் என்*
*தமிழுக்கும் பெருமையே...*

*தமிழ்த் தேசம் தலை சிறக்க*
*தமிழர் விழிப்புணர்வு கொள்ள*
*தமிழனின் விடி வெள்ளி ஆகிடத்தானோ*
*தமிழனென்னும் பெயர் கொண்டாய்*
*தமிழால் நீ செய்தியும் கொடுத்து*
*தமிழரையும் ஈர்த்துக் கொண்டாய்*

*தமிழ் புலவர் கவி எடுத்து*
*தமிழ் இலக்கியம் காத்து நின்றாய்*
*தமிழ் கவிஞர்கள் பெயரனைத்தும்*
*தமிழர்க்கு பரப்பி விட்டாய்*
*தமிழ் கொண்ட சிறுகதையில்*
*தமிழ் ஆர்வம் புகுத்தி நின்றாய்*

*தமிழனென்று பெயர் கொண்டு*
*தமிழால் தலை நிமிர்ந்து நின்றாய்*
*தமிழனென ஓராண்டு தடம் பதித்து*
*தமிழர் தலைகளையும் நிமிரச் செய்தாய்*
*தமிழ் அரசியலும் கற்றுத் தந்தாய்*
*தமிழர் கண்களையும் திறந்து விட்டாய்*

*தமிழுடன் உன் பயணம்*
*தமிழர்க்காய் என்றுமே கரம் கொடுக்க*
*தமிழனாய் இன்று நான்*
*'தமிழன்' நாளிதழில் ஓராண்டு வாழ்த்தாக*
*தமிழிலே கவியாக எழுதுகிறேன்*
*'தமிழனே' நீ பருந்தாக உயரப் பறந்திடுவாய்..*

**வன்னித் தமிழ் மறவன்.**
**கிளிநொச்சி .**

# வாழைச்சேனையில் மக்கள் வரிசையிலிருந்து மதுபானம் கொள்வனவு

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் அமுல்படுத் தப்பட்டிருந்த பயணத்தடை நேற்று முதல் தளர்த்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து மக்கள் அத்தியா சிய உணவுப்பொருட்களை கொள்வ னவு செய்வதில் அதிகளவில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வாழைச்சேனை பகுதிகளில் மதுபானம் கொள்வனவு செய்வதற்கு அதிகளவானோர் மதுபான நிலையங்களின் எதிரில் நீண்ட வரிசைகளில் நிற்பதை காணக்கூடியதாக இருந்தது.





# யடிஹேன கிராமசேவகர் பிரிவில் 76 பேருக்கு கொரோனா தொற்று

## பிரதேசம் முழுமையாக முடக்கம்

(ஹனபி எம்.தாஸீம்.)

பியகம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மல்வானையிலுள்ள யடிஹேன கிராமசேவகர் பிரிவும், தெல்கொடையிலுள்ள சியம்பலாபே வத்த கிராமசேவகர் பிரிவும் நேற்று அதிகாலை 4.00 மணியிலிருந்து முற்றாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பிரிவும், பொலிஸாரும் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டதையடுத்து இவ்விரு கிராமசேவகர் பிரிவுகளும் நேற்றி லிருந்து இவ்வாறு தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

அதற்கிணங்க இதுவரை யடிஹேன கிராமசேவகர் பிரிவில் 76 கொரோனா தொற்றுக்குள்ளான வர்களும், சியம்பலாபேவத்த கிராம சேவகர் பிரிவில் 66 கொரோனா தொற்றுக்குள்ளானவர்களும் இனங் காணப்பட்டுள்ளனர்.

மேலும் சியம்பலாபேவத்த கிராம சேவகர் பிரிவில் கொரோனாவால் இதுவரை நான்குபேர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை ஒரு மாத காலமாக




தனிமைப்படுத்தப்பட்டிருந்த பியகம வடக்கு கிராமசேவகர் பிரிவு நேற்று (21) அதிகாலை 4.00 மணியிலிருந்து பூரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

பியகம சுகாதார வைத்திய அதிகாரி பியஸன்ன விஜயதிலகவுடன் இணைந்து பியகம பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.ஜே.எம்.ஆர்.சமரசிங்க மற்றும் மீகஹவத்த பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த ஹேரத் ஆகியோர் கூட்டாக கொரோனா நிலைமையை கண்காணித்துவருகின்றனர்.

# வடக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதவி காலத்தை நீடிக்க கலந்துரையாடல்



கொரோனா அச்சுறுத்தல் நீங்கி நாட்டில் சாதாரண சூழல் ஏற்படும் வரையில்,

வடக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதவிக் காலத்தினை நீடிப்பது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட பல்வேறு கூட்டுறவுச் சங்க நிர்வாகங்களின் பதவிக்காலம் நிறைவடைந்த போதிலும், கொரோனா பரவலினால் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழல் காரணமாக அவற்றுக்கான புதிய நிர்வாகிகளை தெரிவுசெய்ய முடியாத சூழல் காணப்படுகின்றது.

இதுதொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில், வடக்கு மாகாண ஆளுநருடன் கலந்துரையாடிய கடற்றொழில் அமைச்சர், கூட்டுறவுச் சங்க நிர்வாகங்களின் பதவிக் காலத்தினை நீடிப்பதன் மூலம், தற்போதைய அசாதாரண சூழலில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுளையும் தடங்கலின்றி மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் மேலும் 47 கொரோனா மரணங்கள்

**நாட்டில் மேலும் 47 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. இந்த மரணங்கள் அனைத்தும் கடந்த 19ஆம் திகதி பதிவாகியதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.**

**உயிரிழந்தவர்களில் 27 ஆண்களும் 20 பெண்களும் அடங்குகின்றனர். 30 வயதுக்குக் கீழுள்ள ஒருவரும், 30 - 59 வயதுக்கிடைப்பட்டவர்கள் 06 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 40 பேருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.**

# 2000 பேருக்கு கொரோனா தொற்று

நாட்டில் நேற்று (21) காலை வரையான 24 மணிநேரத்தில் புதிதாக 2 ஆயிரத்து 28 கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 302 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 307 பேரும், கண்டி மாவட்டத்தில் 27 பேரும், யாழ். மாவட்டத்தில் 67 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 77 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 73 பேரும், நுவரெலியா மாவட் டத்தில் 66 பேரும், பதுளை மாவட்டத்தில் 46 பேரும், மட்டக் ளப்பு மாவட்டத்தில் 130 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும், திருகோணமலை மாவட்டத்தில் 23 பேரும், வவுனியா மாவட்டத்தில் 26 பேரும், மன்னார் மாவட்டத்தில் 15 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

# நாவலப்பிட்டியில் ஹெரோயினுடன் ஆறு பேர் கைது





நாவலப்பிட்டி பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்யும் 06 சந்தேகநபர்கள் நாவலப்பிட்டி பொலிஸாரால் நேற்று கைது செய்துசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 24 மற்றும் 26 வயதுடைய பெண்கள் இருவரும் உள்ளடங்குவதாக நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி செலான் பிரிட்ஜ் பகுதி வீடொன்றில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டிருந்தபோது சந்தேக நபர்களைக் கைதுசெய்யும் சந்தர்ப்பத்தில் அவர்களிடமிருந்து 112 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கண்டி, நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவர் பல்வேறு சட்டவிரோத செயற்பாட்டுகளில் ஈடுபட்டவர் எனவும் தெரியவருகின்றது. சந்தேக நபர்களை நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நாவலப்பிட்டி பிரதான பொலிஸ் பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

# லிந்துலை நகரசபைத் தலைவர் உள்ளிட்ட ஏழு பேர் பிணையில் விடுதலை

## சகலரும் 14 நாட்கள் சுயதனிமைப்படுத்தலில்

பொலிஸ் பிணையில் விடுதலையான தலவாக்கலை, லிந்துலை நகரசபைத் தலைவர் பாரதிதாசன் உட்பட ஏழு பேர் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் 14 நாட்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சுயதனிமை விதிமுறைகளை மீறி விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட தலவாக்கலை நகரசபைத் தலைவர் உட்பட தலவாக்கலை நகர வர்த்தகர்கள் ஆறு பேர் தலவாக்கலை பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சுயதனிமை விதிமுறையை மீறி தனியார் மண்டபம்



ஒன்றில் விருந்துபசாரத்தில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு 119 என்ற எண்ணில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய தலவாக்கலை பொலிஸார் சோதனையிட்ட போது அங்கிருந்த நகரசபைத் தலைவர் உட்பட வர்த்தகர்கள் 06 பேர் அடங்கலாக 07 பேர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன், வழக்குப்பதிவு செய்து நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தலவாக்கலை பொலிஸார் கொட்டகலை பொதுச் சுகாதார காரியலயத்திற்கு அறிவித்ததையடுத்து, பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.சுதர்சன் தலைமையிலான குழுவினரால் நகரசபைத் தலைவர் உட்பட விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட ஆறு வர்த்தகர்களும் எதிர்வரும் 04ஆம் திகதிவரை சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.





**பயணத்தடை நீக்கப்பட்டாலும், நேற்று (21) சிலாபம் நகரத்திலிருந்து பிரயாண நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போதியளவு பஸ்கள் சேவையில் இருக்கவில்லை. இந்த நிலைமையினால் சிலாபம் நகரத்திலுள்ள மக்கள் பஸ் தரிப்பிடங்களில் காத்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (படங்கள் - ஜூட் சமந்த)**

# காட்டுயானை தாக்கி ஒருவர் பலி

**மொனராகலை, ஹந்தபானாகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.**

**ஹந்தபானாகல பிரதேசத்தைச் சேர்ந்த 77 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 10 ஆம் திகதி இந்த கிராமத்துக்குக் காட்டுயானைகள் உள்நுழைந்துள்ளதுடன், அவற்றைத் துரத்துவதற்கு முயற்சித்தபோதே அவர் இவ்வாறு ஒரு காட்டுயானையால் தாக்கப்பட்டுள்ளார்.**

**இதனால் படுகாயங்களுக்குள்ளான அவர் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக மொனராகலை பொது வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.**

# ஹட்டன் –நுவரெலியா நகரங்களில் நேற்று வர்த்தக நிலையங்கள் திறப்பு





(க.கிஷாந்தன்)

நாட்டில் விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஹட்டன் மற்றும் நுவரெலியா உள்ளிட்ட மலையக நகரங்களில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் நேற்று திறக்கப்பட்டி ருந்தன.

குறிப்பாக மதுபானசாலைகள் அனைத்தும் திறக்கப்பட்டுள்ளதுடன், சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மதுபானசாலைகள் திறக்கப்பட்டுள் தால் அதிகளவான நுகர்வோர் வருகை தந்தனர். தனியார் மற்றும் அரச பஸ் வண்டிகள் சில போக்குவரத்தில் ஈடுபட்ட நிலையில், அவற்றில் பயணிகளின் எண்ணிக்கை குறைந்தே காணப்பட்டது.

இதேவேளை, ஹட்டன் மற்றும் நுவரெலியா உள்ளிட்ட பெருந்தோட்டப் பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

# மரக்கலகம கிராமத்தில் 73 பேருக்கு கொரோனா

மாதம்பே பழைய நகரம், மரக்கலகம கிராமத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 146 ஆக உயர்வடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய மாதம்பே, மரக்கலகம கிராமம் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் கடந்த சில தினங்களில் மாத்திரம் 73 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி 204 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள சுகாதாரப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2014 பேரில் 73 பேருக்கு




கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, மரக்கலகம கிராமத்தில் கடந்த வாரம் ஒட்டுமொத்தமாக 146 கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 844 பேர் கைது

நாட்டில் நேற்றுக் காலை வரையான கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறிய 844 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர். சரியான முறையில் முகக்கவசம் அணியாமை, மாகாண எல்லைகளைக் கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் கட்டுப் பாட்டு விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. நாடளாவிய ரீதியில் இன்றும் சுற்றி வளைப்புகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# 23 கிலோ கேரள கஞ்சா மீட்பு

(ஜூட் சமந்த)

கடலில் மிதந்துகொண்டிருந்த நிலையில் பொலித்தீன் உறையிலிருந்து 23 கிலோ கிராம் கேரள கஞ்சா உடப்பு கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் உடப்பு கடற்பரப்பில் மிதந்துகொண்டிருந்த நிலையிலேயே இந்த கஞ்சா தொகை மீட்கப்பட்டுள்ளது.

238 கிலோ கிராம் கேரள கஞ்சா போதைப் பொருளைப் படகில் எடுத்து வந்த நபரொருவரை உடப்பு கடற்படையினர் கடந்த 18ஆம் திகதி கைதுசெய்திருந்தனர்.

அந்த கேரள கஞ்சா தொகை 98 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்தது. சிலாபம், வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருந்தார். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை 07 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் சிலாபம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியிருந்தது.

கருக்குபனையில் கைதுசெய்யப்பட்ட கேரள கஞ்சா தொகை மற்றும் உடப்பு பிரதேசத்தில் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதி ஆகியவற்றுக்கிடையில் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக விசாரணைகள் முன்னெடுத்து வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் இந்த கேரள கஞ்சா போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையதாகத் தெரிவிக்கப்படும் பிரதான சந்தேகநபர் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித் தனர்.

# மட்டக்களப்பில் 15 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

## பிரதான வியாபாரி - அவரது தாயார் தப்பியோட்டம்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டு. நகர் பகுதியில் போதைவஸ்து வியாபாரம் செய்துவரும் ஒருவரின் வீட்டை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் இரவு முற்றுகையிட்டு 14 கிராம் 75 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், குளிசைகள், கேரள கஞ்சா மற்றும் போதைப்பொருள் பொதிசெய்யும் இயந்திரம், 3 ஆயிரம் ரூபா பணத்துடன் ஒருவரை கைதுசெய்ததுடன், பிரதான வியாபாரி, அவரது தாயார் தப்பியோடியுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தகவலுக்கமைய விசேட அதிரடிப்படையினருடன், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் நகர்ப் பகுதியிலுள்ள லொயிஸ் அவனியூர் வீதியிலுள்ள குறித்த வீட்டை சம்பவ தினத்தன்று இரவு 8 மணிக்கு முற்றுகையிட்டபோது, பிரதான போதைப்பொருள் வியாபாரியும் அவரது தாயாரும் அங்கிருந்து தப்பியோடிய நிலையில், 14 கிராம் 75 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், ஒரு கிராம் கஞ்சா, 14 குளிசைகள், 3 ஆயிரம் ரூபா பணத்துடன் ஒரு இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த பிரதேச கிராம உத்தியோகத்தரை வரவழைத்து வீட்டை இரவு 11 மணிவரை சோதனையிட்டபோது அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்து ஐஸ் போதைப்பொருள், போதைப்பொருள் பொதிசெய்யும் இயந்திரம், நிறுக்கும் தராசு மற்றும் போதைபொருள் யார் யாருக்கு விற்பனை செய்யப்பட்டது, அவர்களிடம் வாங்கிய பணம், வங்கியில் பணம் அனுப்பியது, வைப்பிலிட்டது போன்ற தரவுகள் எழுதப்பட்ட கொப்பி உட்பட பல உபகரணங்களை மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். குறித்த இளைஞனை நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, தப்பி ஓடிய பிரதான போதைப்பொருள் வியாபாரி மட்டக்களப்பு - கொழும்பு தனியார் பஸ்ஸில் நடத்துனராக கடமையாற்றி வந்துள்ளதாகவும் இவருடன் இவரது தாயாரும் இணைந்து இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக திறந்துவைப்பு



(அட்டாளைச்சேனை)

நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலைகளை கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றியமைக்கும் வேலைத்திட்டத்தின்கீழ் அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை கொரோனா நோயாளர்களை பராமரிக்கும் இடைத்தங்கல் சிகிச்சை நிலையமாக புனரமைக்கப்பட்டு நேற்று திறந்துவைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அதிகார எல்லைக்குட்பட்ட முதலாவது ஆயுர்வேத வைத்தியசாலை இவ்வாறு கொவிட் தொற்றுக்குள்ளானோரை பராமரிக்கும் சிகிச்சை நிலையமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனைப் பிராந்திய சுதேச வைத்தியத்துறை இணைப்பாளர் டொக்டர் எம்.ஏ.நபீல் தலைமையில் இடம்பெற்ற இத்திறப்பு விழா நிகழ்வின்போது, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் உள்ளிட்ட சுகாதாரத்துறையினர் கலந்துகொண்டனர்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பகுதியில் சடுதியாக அதிகரித்துவரும் கொவிட் தொற்றாளர்களை பராமரிக்கும் வகையில் இவ்வாறான சிகிச்சை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த இடைத்தங்கல் சிகிச்சை நிலையத்தில் 40 நோயாளர்கள் தங்கி சிசிச்சைபெறும் வகையில் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆயுர்வேத வைத்தியசாலையில் சேவையாற்றி வரும் வைத்தியர்களும், அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் சேவையாற்றும் வைத்தியர்களும், பிற



வைத்தியசாலை களிலிருந்து கடமைக்கு அமர்த்தப்பட்ட தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் போன்றோர் இங்கு அனுமதிக்கப்படும் கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளித்து பராமரிக்கவுள்ளனர்.



மேலைத்தேய வைத்திய சிகிச்சைமுறைகளுக்கு மேலதிகமாக இவ்வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் கொவிட் தொற்றாளர்களுக்கு ஆயுர்வேத சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன.

இத்தள ஆயுர்வேத வைத்தியசாலை மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த சிகிச்சைகள் தற்போது இவ்வைத்தியசாலையின் அருகிலுள்ள சுகாதார நிலையத்தில் தடையின்றி மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையில் சுமார் 100 பேர் தங்கியிருந்து சிகிச்சைபெறும் கொவிட் சிகிச்சை நிலையம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

கொவிட் தொற்றாளர்களைப் பராமரிக்கும் வகையில் கல்முனைப் பிராந்தியத்தில் பாலமுனை மற்றும் மருதமுனை ஆகிய



பிரதேசங்களிலுள்ள பிரதேச வைத்தியசாலைகள் கொவிட் சிகிச்சை நிலையங்களாக செயற்பட்டு வருகின்றன.

இவ்விரு வைத்தியசாலைகளிலும் சுமார் 190 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு மேலாக புதிதாக அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கொவிட் சிகிச்சை நிலையங்கள் மூலம் மேலும் 140 பேர் சிகிச்சை பெறவுள்ளனர்.

# மட்டு. நாவலடி கடற்கரையில் இறந்த கடலாமையொன்று மீட்பு



(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு நாவலடி கடற்கரையில் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் கடலாமையொன்று கரையொதுங்கியுள்ளது.

இவ்வாறாக இறந்த நிலையில் கடலாமையொன்று கரையொதுங்கியுள்ளதாக அப்பிரதேசத்தில் வசிக்கும் மீனவர்கள் வனஜீவராசிகள் அலுவலகத்திற்கு தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கல்லடி வனஜீவராசிகள் அலுவலகத்தின் அதிகாரி குறித்த இடத்திற்கு விரைந்து உயிரிழந்த கடலாமையை மீட்டு, கடல்வாழ் உயிரினங்களை அம்பாறை வனஜீவராசிகள் மிருக வைத்திய பிரிவிற்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன், உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் குறித்த உடற்கூற்று அறிக்கை தொடர்பாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தினால் அம்பாறை வைத்தியசாலைக்கு 5 இலட்சம் ரூபா நிதியுதவி



(நூருள் ஹுதா உமர்)

அம்பாறை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு சிகிச்சை உபகரணங்கள் கொள்வனவுசெய்ய சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தினால் 5 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா அலையின் தாக்கம் கடுமையாக அதிகரித்துவரும் சூழ்நிலையில், அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் தேவை வெகுவாக மக்கள் மத்தியில் உணரப்பட்டு வருகிறது. இந்த தேவையை பூர்த்திசெய்ய தமது பங்களிப்பை செய்யும் நோக்கிலேயே சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தினால் 5 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ்.எம்.முபாரக், பொதுச் செயலாளர் எம்.எப்.அப்துல் வாஸித், பிரதம பொருளாளர் எம்.எம்.ஏ.றஹீம், நிறைவேற்று செயற்குழு உறுப்பினர்களான கல்முனை மாநகர சபை உறுப்பினர் என்.எம்.றிஸ்மீர், ஏ.சி.இக்பால், எஸ்.எச்.இக்பால் அடங்கிய குழுவினர் இந்த உதவித்தொகையை அம்பாறை பொது வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் உபுல் விஜயநாயக்கவிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் அம்பாறை பொது வைத்தியசாலை பிரதி செயலாளர் என்.ஜி.சி.குணரத்ன, அம்பாறை மாவட்ட திறன்வாண்மையாளர்கள் சங்கத் தலைவர், வைத்தியசாலை அதிகாரிகள், தாதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் நூறாவது இலவச கண்புரை சத்திரசிகிச்சை வெற்றி





(ஐ.எல்.எம் நாஸிம்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் கண் சிகிச்சைப் பிரிவு தனது 100ஆவது இலவச கண்புரை (Cataract) சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றி அண்மையில் சாதனை படைத்துள்ளது.

இதனை பாராட்டும் முகமாக ஏற்பாடாகியிருந்த நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர் மற்றும் சுகாதார உதவியாளர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின்போது வைத்தியசாலை சார்பாகவும் பிரதேச மக்கள் சார்பாகவும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எச்.எம்.ஆசாத், கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் அமில ஐயரத்னவுக்கும் அவரது குழுவினருக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்றுள்ள இந்த காலப்பகுதியில் அதற்குரிய தொற்றுத் தடுப்பு முறைகளை முறையாக பின்பற்றி, மிகக் குறைந்த ஆளணி மற்றும் உபகரணங்களுடன் சம்மாந்துறை பிரதேசத்தில் வாழ்கின்ற பல்லின மக்களுக்கு கண் சிகிச்சை சேவைகளை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை தொடர்ந்து வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமம் பகுதியில் கைக்குண்டு மீட்பு



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தினிபுரம் வயல் பகுதியில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் ஆடு மேய்க்கச் சென்ற ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைக்குண்டு கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

தகவலையடுத்து அவ்விடத்துக்கு சென்ற பொலிஸாரினால் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. இந்த கைக்குண்டு கடந்த யுத்த காலத்தின்போது விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்டதா அல்லது வேறு யாருக்காவது சொந்தமானதா என்பது பற்றி தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



**'தமிழன்' பத்திரிகை இன்று தனது இரண்டாவது அகவையில் காலடியெடுத்து வைப்பதையிட்டு வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.**

**இப்பத்திரிகை மென்மேலும் வளர்ச்சியடைந்து முன்னேற்றப் பாதையில் செல்லவேண்டுமென பிரார்த்திக்கிறேன்.**

**குறிப்பாக, அண்மைக்காலமாக முஸ்லிம் மக்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டபோதெல்லாம் அவற்றை துணிவுடன் வெளிக்கொணர்ந்து, உரிய தரப்பினர் கண் திறக்கும்வரை - அழுத்தங்களை வழங்குவதுவரை இப்பத்திரிகை மேன்மையாக செயற்பட்டு வருவதை மறந்துவிட முடியாது.**

**நாட்டின் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு ஏற்படச் செய்வதில் ஊடகங்களுக்கு பாரிய பொறுப்புண்டு.**

**அந்தப் பொறுப்பை செவ்வனே நிறைவேற்றிவரும் 'தமிழன்' பத்திரிகை தனது இரண்டாவது ஆண்டிலும் அந்த பணியைத் தொடரவேண்டும் என வாழ்த்துகிறேன்.**

**அஷ்ஷெய்க் ஹனிபா மதனி**
**(முன்னாள் மாநகர சபை உறுப்பினர்)**
**தலைவர் - தேசிய ஐக்கியத்துக்கான முஸ்லிம் பேரவை, அக்கரைப்பற்று.**



**'தமிழன்' தினசரி பத்திரிகை ஓராண்டு பூர்த்தி என்பது உண்மையில் மிகப்பெரிய சாதனையாகும்.**

**ஒரு தினசரி பத்திரிகையை அதுவும் வெற்றிநடை போடும் பத்திரிகையை கொண்டுசெல்வதென்பது இலேசுப்பட்ட விடயமல்ல. அத்துடன், கொரோனா அச்சுறுத்தல், முடக்கல் காரணமாக பத்திரிகையை வெளியே விற்பனைக்கு விடமுடியாத சூழ்நிலை.**

**அதுபோல் இப்போதெல்லாம் பலரும் இணையத்தள செய்தியை அதிகம் நாடும் நிலையில், அச்சுப்பத்திரிகையை தொடர்ந்து நடத்திவருவது இமாலய சாதனை என்றே சொல்லவேண்டும்.**

**இது விடயத்தில் 'தமிழன்' பத்திரிகை ஆசிரியர் தோழர் சிவராஜா அபாரமான திறமைகளைக்கொண்ட ஊடகவியலாளர். இவர் ஆசிரியராக இருந்து வெளிவந்த 'சுடர் ஒளி' பத்திரிகை, தமிழ் பேசும் மக்களை வெகுவாக கவர்ந்தது.**

**அதேபோன்று அதையும் விட அழகிய அச்சுப்பதிவில் 'தமிழன்' வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.**

**தொடர்ந்தும் 'தமிழன்' பத்திரிகை வெளிவந்து தமிழ் பேசும் மக்களினதும், நாட்டினதும் குரலாக இருக்க வாழ்த்துகிறேன். வாழ்க பல்லாண்டு.**

**முபாறக் அப்துல் மஜீத் மௌலவி**
**தலைவர்,**
**உலமா கட்சி,**
**ஐக்கிய காங்கிரஸ்**

# மட்டக்களப்பில் டெல்ட்டா வைரஸ் பரவும் அபாயம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மயூரன் எச்சரிக்கை



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 4951 ஆக அதிகரித்துள்ள நிலையில், டெல்ட்டா வைரஸ் பரவக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதுடன், மாவட்டத்தில் தொற்று அதிகரிப்பதற்கான முக்கிய காரணம் பயணத்தடையை பின்பற்றாமை, ஒன்று கூடல்களை தவிர்க்காமையே ஆகும். எனவே, பொதுமக்கள் தேவையின்றி வீட்டிலிருந்து வெளியேற வேண்டாமென மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை (21) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் கொரோனாவுக்கு சிகிச்சை யளிக்கும் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில், ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும், கோறளைப்பற்று மத்தி சுகாதார பிரிவில் மீராவோடை பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய ஆணொருவர் உட்பட இருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதுடன், 89 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

இதேவேளை மாவட்டத்தில் தொடர்ந்து அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் எழுமாறாக இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், இடம்பெற்ற அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 பேருக்கும், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 பேருக்கும், வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேருக்கும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேருக்கும், கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 07 பேருக்கும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேருக்கும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 26 பேருக்கும், கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேருக்கும், வாகரை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், பொலிஸ் உத்தியோகத்தர் 02 பேர் உட்பட்ட 89 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாவட்டத்தில் இதுவரை 4 ஆயிரத்து 951 பேர் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன், 72 பேர் உயிரிழந்துள்ளனர். மட்டக்களப்பில் தற்போது அல்பா வைரஸ் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கை யில் டெல்ட்டா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவைச் சேர்ந்ததாகும். இது மிகவும் ஆபத்து கூடியது. அது எந்நேரமும் மட்டக்களப் பிற்குள் வரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது.

எனவே, பொதுமக்கள் மரணவீடுகளில் மற்றும் பொது வைபவங்களில் ஒன்று கூடுவதை தவிர்த்துக்கொண்டு, உரிய சுகாதார முறையைப் பின்பற்றி தேவையின்றி வெளியே வராமல் வீட்டிலிருக்குமாறு அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு



(பைஷல் இஸ்மாயில்)

கொரோனா மூன்றாவது அலை காரணமாக அவதிப்படும் மக்களுக்கு உதவும் முகமாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரபின் வழிகாட்டலிலும், பங்களிப்பிலும் ஆரம்பிக்கப்பட்ட அனர்த்த நிவாரண நிதியத்தின் மூலம் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் தலைமையில் நேற்று முன்தினம் (20) ஒன்றியத்தின் அட்டாளைச்சேனை தலைமைக் காரியாலயத்தில் இவை வழங்கிவைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று, இறக்காமம், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 50 தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை மற்றும் இணையத்தள ஊடகவியலாளர்களுக்கு இந்த உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் உரையாற்றுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் பதவியேற்று இன்னும் ஒரு வருடம் பூர்த்திசெய்யாத நிலையில், தனக்கு வாக்களித்த மக்களுக்கு முடியுமானவரை தேவைகளை நிறைவேற்றி வருகின்றார். ஊடகவியலாளர்களுக்கு இந்த நிவாரணப்பொதிகளை அவர் வழங்கியமை, அவரும் ஒரு ஊடகவியலாளராக இருந்தமையினால் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நன்கறிந்தவர் என்ற அடிப்படையிலேயே ஆகும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்யாத இந்த விடயத்தை அவர் முன்வந்து ஊடகவியலாளர்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்கியமையானது அவரின் நற்காரியங்களில் ஒன்றெனக் குறிப்பிட முடியும்.

தற்போது இருக்கும் அரசாங்கத்துடன் மக்களுக்கு பயன்தரும் விடயங்களுக்கு ஆதரவு தெரிவித்தும், மக்களுக்கு பிரச்சினைகள் வரும் விடயங்களில் இருந்து ஒதுங்கி நடக்கக்கூடியவராகவும் இருந்து கொண்டு மக்களின் துயர் துடைக்கும் ஒருவராக முஷாரப் எம்.பி. காணப்படுகின்றார்.

எதிர்வரும் காலங்களில் ஊடகவியலாளர்களுக்கு முடியுமானவரை உதவிகளைச் செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளரினூடாக இந்தச் செய்தியை அவருக்கு சொல்லி வைக்கிறேன் என்பதோடு, ஊடகவியலாளர்களின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்புக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் வை.எல்.நியாஸ் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களுக்கான உலர் உணவுப்பொதிகளை வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# அபிவிருத்தி என்ற பெயரில் மாகாண சபைகளின் அதிகாரத்தைக் குறைக்கவே அரசாங்கம் முனைகிறது

## தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவர் பிரசன்னா இந்திரகுமார்



மாகாண சபையின் அதிகாரங்களைத் தன்வசப்படுத்தும் விடயங்களை மத்திய அரசாங்கம் துரிதமாக செயற்படுத்துகின்றது. அதிலும் மாகாண சபைக்குரிய பாடசாலைகள், வைத்தியசாலைகளைத் தரமுயர்த்தல் என்ற பெயரில் மத்திய அரசின் கீழ் கொண்டு வந்து மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பிடுங்கும் செயற்பாடுகளையே மேற்கொள்கின்றது என கிழக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதித் தவிசாளரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவருமான பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்மநாபா மன்றத்தினால் நடத்தப்பட்ட தியாகிகள் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத் திற்குத் தங்களை அர்ப்பணித்த உன்னத தலைவர்களில் தோழர் பத்மநாபாவும் ஒருவர். அவரை இழந்து நிற்பது இன்றைய நிலையில் எங்களுக்கு மிகவும் வேதனை தரும் விடயமே. எமது தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட தேச விடுதலைப் போராட்டத்தில் எமது ஒன்றுமையின்மையின் காரணத்தினால் பல துர்ப்பாக்கிய நிகழ்வுகள் இடம்பெற்று பல தலைவர்களை இழந்திருக்கின்றோம்.

அவ்வாறு எமது தலைவர்களின் தியாகம், எமது மக்களின் வலி, எமது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் போன்றனவற்றின் மூலம் கிடைக்கப்பெற்ற முக்கிய விடயமே இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடான 13ஆவது திருத்தச் சட்டம். இந்த 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த நாட்டின் அரசாங்கங்கள் கபட நாடகம் ஆடிக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் இந்தியாவின் உயர்ஸ்தானிகர் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்தபோது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு பூரணமாக ஒத்துழைப்போம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனாலும், இந்தியா இந்த விடயத்தைச் சொல்லிக் கொண்டு மாத்திரம் இல்லாமல் முழுமையாகவும், விரைவாகவும் கையாள வேண்டும். தற்போதைய நிலையில் மாகாணசபையின் அதிகாரங்களைத் தன்வசப்படுத்தும் விடயங்களை மத்திய அரசாங்கம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. அதிலும் மாகாணசபைக்குரிய பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டுவந்து மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பிடுங்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாகாணத்திற்குரிய பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்குதல் என்ற பெயரிலும், வைத்தியசாலைகள் தரமுயர்த்தல் என்ற பெயரிலும் மத்திய அரசின் கீழ் கையகப்படுத்தி அவற்றின் மீதுள்ள மாகாண சபை அதிகாரங்களைக் குறைப்பதை விட, அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரித்து, அவற்றினை அபிவிருத்தி செய்து, மாகாண சபைகளின் கீழேயே தரமுள்ளவையாக இயங்கச் செய்யமுடியும். ஆனால், அரசாங்கம் அவற்றைச் செய்யாமல் அபிவிருத்தி என்ற மாயவலையின் மூலம் மாகாண அதிகாரங்களைக் குறைக்கவே எண்ணுகின்றது.

எனவே, இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் இந்த 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்காக தங்கள் கொள்கை வகுப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்தி சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன், மிக விரைவில் மாகாண சபைகளை நடத்தி அதற்கும் மேலாக தமிழ் மக்களுக்குரிய நிரந்தரத் தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

# கொரோனா நோயாளர்களை ஏற்றிச்சென்ற பஸ் பெரியகல்லாறு பிரதான வீதியில் விபத்து

(மட்டக்களப்பு நிருபர்)

கொரோனோ தொற்றுக்குள்ளானவர்களை ஏற்றிக்கொண்டு சென்ற தனியார் பஸ், கெப் ரக வாகனம் ஒன்றுடன் மோதுண்டு பெரியகல்லாறில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கம்பஹா மாவட்டத்திலிருந்து கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியால் அம்பாறைக்கு சென்றுகொண்டிருந்த தனியார் பஸ், பெரியகல்லாறு பிரதான வீதியில் எதிரே வந்த அரச திணைக்கள கெப் ரக வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துள்ளானதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரித்தனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பிரதான வீதியில் இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் கொவிட்-19 தொற்றுக்குள்ளான 27 கொரோனா நோயாளிகளை ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியூடாக அம்பாறை மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் சிசிச்சையளிப்பதற்கு இராணுவத்தின் பாதுகாப்புடன் கொண்டுசெல்லப்பட்ட தனியார் பஸ், கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட



உதவிப் பணிப்பாளரை கல்முனையிலிருந்து ஏற்றிக்கொண்டு சென்ற கெப் ரக வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் தனியார் பஸ்ஸும், திணைக்கள கெப் ரக வாகனமும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், வாகனத்தில் பயணித்த எந்தவொரு நபருக்கோ, கொரோனா நோயாளிகளுக்கோ எதுவித காயமும் ஏற்படவில்லையென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்து குறித்து களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

# மீராவோடை கிழக்கு பிரதேச பகுதியில் வீடுவீடாகச் சென்று பி.சி.ஆர். பரிசோதனை



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனைகள் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக மீராவோடை கிழக்குப் பிரதேசத்தின் ஒரு பகுதியில் நேற்று (21) வீடுவீடாகச் சென்று பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் (20) இரு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. இதன் காரணமாக குறித்த பகுதி மக்களுக்கு நேற்று (21) இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பங்களிப்புடன் குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர கரையோர அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டம்; பூங்காக்கள் - நடைபாதை - பொழுதுபோக்கு அம்சங்களுக்கு ஏற்பாடு

(அஸ்லம் மௌலானா)

கல்முனை மாநகர கரையோர அபிவிருத்தி திட்டமிடல் குழுவின் இரண்டாவது ஆலோசனைக் கூட்டம் நேற்று (21) கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் ஏற்பாட்டிலும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையிலும் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, பொறியியலாளர்களான ஏ.ஜே.ஏ.எச்.ஜௌஸி, எம்.ஐ.எம்.றியாஸ், நில அளவையாளர் எம்.எம்.இப்றாஹிம், கரையோரம் பேணல் திணைக்களத்தின் திட்டமிடல் உத்தியோகத்தர் எம்.எஸ்.ஏ.மப்றூர், நகர அபிவிருத்தி அதிகாரி சபையின் திட்டமிடல் உத்தியோகத்தர் எம்.எம்.முஸ்தாக், மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன் உட்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பட வரைஞர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.



கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது தொடக்கம் பெரிய நீலாவணை வரையான கடற்கரைப் பகுதியை அழகு படுத்தும் வேலைத்திட்டத்தில் உள்ளடங்கும் பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் குறித்து கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டிய பூர்வாங்க ஏற்பாடுகள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது. அத்துடன், இவற்றுக்கான நில அளவை செய்தல், வரைபடங்கள் தயாரிப்பு மற்றும் இதர பணிகளை முன்னெடுக்கும் பொறுப்புகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இத்திட்டத்தினுள் சாய்ந்தமருது கடற்கரைப் பூங்கா, கல்முனை சிறுவர் பூங்கா, மருதமுனை சிறுவர் பூங்கா என்பன புனரமைப்பு செய்யப்படவுள்ளதுடன், சாய்ந்தமருது தொடக்கம் பெரிய நீலாவணை வரையான கடற்கரைப் பகுதியின் இன்னும் சில இடங்களில் பொதுமக்களின் பொழுதுபோக்குக்காக பொதுப் பூங்காக்களை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கடற்கரை வீதியை அகலப்படுத்தி விஸ்தரித்தல், நடைபாதை அமைத்தல், வாகனத் தரிப்பிடங்கள் அமைத்தல், மருதூர் சதுக்கம் உட்பட சாய்ந்தமருது முகத்துவாரப் பகுதியின் இரு பக்கங்களையும் அழகுபடுத்தல், ஒரே கூரையின் கீழ் பல உணவகங்கள் இயங்குவதற்கான கட்டடத்தொகுதிகள் அமைத்தல், அவ்வாறே ஒரே இடத்தில் அனைத்து வாடிகளும் செயற்படுவதற்கான கட்டடத் தொகுதிகள் அமைத்தல் என பல்வேறு அம்சங்கள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இதற்காக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம், கடற்கரை வீதிக்கு கிழக்குப் பக்கமாகவுள்ள கடற்கரைப் பகுதியிலுள்ள கட்டுமானங்கள் அனைத்தையும் அவசரமாக அகற்றுதல், மாற்று இடங்கள் வழங்கப்பட வேண்டிய வாடிகள் மற்றும் உணவகங்கள் நடத்துவோரின் விபரங்களை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கான அறிவுறுத்தல்களும் சம்பந்தப்பட்ட உத்தியோகத் தர்களுக்கு இதன்போது வழங்கப்பட்டன.

உரிய காலப்பகுதியினுள் கட்டுமானங்களை அகற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தவறும் நபர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்து, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், இது விடயத்திலும் யாராக இருந்தாலும் எந்த அரசியல், தனிப்பட்ட செல்வாக்குகளுக்கும் இடமளிக்க வேண்டாம் எனவும் வலியுறுத்தப்பட்டது.


சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மக்களுக்கு மாற்று வீடுகள் வழங்கப்பட் டிருப்பதால் முந்திய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட் டதன்படி கடற்கரைப் பகுதியில் குடியிருப்பதற்கோ, வேறு கட்டுமானங்களுக்கோ எவ்வித அனுமதியும் வழங்குவதில்லை என்ற இறுக்கமான தீர்மானத்தை கரையோரம் பேணல் திணைக்கள உத்தியோகத்தர்கள் கண்டிப்பாக அமுல்நடத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# இருபது கிலோ கொழுந்து பறிக்குமாறு டிறேட்டன் தோட்ட நிர்வாகம் நிர்ப்பந்தம்

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## வாரத்தில் 3 நாட்கள் மாத்திரமே தொழில் வழங்குவதாக குற்றச்சாட்டு




(க.கிஷாந்தன்)

நாளொன்றுக்கு 20 கிலோ கொழுந்து பறிக்காவிட்டால் மூன்று நாட்கள் மாத்திரமே வேலை வழங்கப்படுமென தோட்ட நிர்வாகம் மிரட்டுவதாக சுட்டிக்காட்டி கொட்டகலை, டிறேட்டன் டீ.டி. பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் நேற்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு, தமது தொழில் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமென சட்டப்பூர்வமாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், தமக்கு 800 ரூபாவே வழங்கப்படுகின்றது என சுட்டிக்காட்டும் தொழிலாளர்கள், தோட்ட முகாமையாளரை உடன் இடமாற்றுமாறும் வலியுறுத்தினர்.

நாளொன்றுக்கான சம்பளத்திற்கு 17 கிலோ கொழுந்தே முன்னர் பறிக்கப்பட்டது. ஆனால், தற்போது 20 கிலோவுக்கு குறைவாக பறிப்பவர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே வேலை வழங்கப்படுமென நிர்வாகத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்புக்கு தொழிலாளர்கள் கடும் எதிர்ப்பை வெளியிடுவதுடன், இது தொடர்பில் தொழிற்சங்கங்கள் உடனடி தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சம்பளத்துக்குப் போராடினால் தொழிலா ளர்களை பழிவாங்கும் நடவடிக்கை தற்போது எமது தோட்டத்தில் நடக்கின்றது. அடிப்படை நாட்சம் பளத்துக்கு 17 கிலோ கொழுந்து பறித்தால் போதும் என்ற ஏற்பாடு உள்ள நிலையில், கம்பனிகள் தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றன. நிர்வாகத்தின் தான்தோன்றித்தனமான - அடாவடித்தனமான - தொழிலாளர்களை அடிமைகளாக வழிநடத்தும் செயற்பாட்டை அனுமதிக்க முடியாது.



ஆகவே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கமும் இப்பிரச்சினையில் தலையிட்டு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்" - எனவும் போராட்டத்தில் பங்கேற்ற தொழிலாளர்கள் குறிப்பிட்டனர். தற்போதைய சூழ்நிலையில் தமக்கான வாழ்வாதாரம் பாதிக் கப்பட்டுள்ளமை தொடர்பிலும், பொருட்களின் விலை உயர்வு சம்பந்தமாகவும் தமது உள்ளக் குமுறல்களையும் தொழிலாளர்கள் வெளியிட்டனர்.

தொழிலாளர்களின் கோரிக்கை மற்றும் போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட டிரேட்டன் தோட்ட முகாமையாளர் கூறியதாவது,

" 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்ற முடிவை நிர்வாகம் எடுத்துள்ளது. நிர்வாகம் இருந்தால்தான் தமக்கு வருமானம் என்பதை உணர்ந்து ஒரு டிவிசன் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கின்றனர். 20 கிலோவுக்கு மேல் பறிக்கின்றனர். டீ.டி. டிவிசன் தொழிலாளர்களே நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு வழங்காமல் போராடுகின்றனர்.




நான் ஐந்து வருடங்களாக முகாமையாளராக பணியாற்றியுள்ளேன். எவருக்கும் அரைநாள் பெயர் வழங்கவில்லை. வறட்சிக் காலத்தில் கூட முழுப்பெயர் வழங்கியுள்ளோம். தற்போதைய சூழ்நிலையில் 20 கிலோவுக்கு மேல் கொழுந்து பறிக்காவிட்டால் நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும். கொட்டகலை பகுதியில் தேயிலை வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. ஹெக்டேயருக்கு அதிகளவான தேயிலைச்செடிகளும் காணப்படுகின்றன. எனவே, இலகுவில் 20 கிலோ எடுக்கலாம்" - என்றார்.

# கொத்மலை சுகாதாரப் பிரிவில் 6 கிராமசேவகர் பகுதிகள் முடக்கம்

(க.கிஷாந்தன்)




நுவரெலியா மாவட்டம் கொத்மலை சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட களுதுமெத, ஹபுகஸ்தலாவ, வீரபுர, பெரமான தெற்கு, டன்சினன் மற்றும் கொரகஓயா கீழ்ப்பிரிவு ஆகிய கிராமசேவகர் பிரிவுகள் நேற்றுமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதிகளில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைக்கமையவே அதிக எண்ணிக்கையிலான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி இந்த கிராமசேவகர் பகுதிகளில் மாத்திரம் 168 பேருக்கு மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்தே, இப்பகுதிகள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளுக்குள் உட்பிரவேசிக்கவும் அங்கிருந்து வெளிச்செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத் தடை மீள அறிவிக்கும்வரை அமுலில் இருக்கும் என கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், அங்கு பலத்த பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை இப்பகுதியில் 100இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு, மேலும் பலருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாகவும் கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.






ISKCON



இல. 188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு – 13
ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்
இறுதிக்கட்ட திருத்தப்பணி
இந்தத் திட்டத்தை பூரணமாக்க ஒவ்வொருவரும்
ரூபா 10.000 நன்கொடை வழங்குங்கள்

அன்பிற்குரிய நண்பர்களே நலன் விரும்பிகளே!

இலங்காபுரியின் தலைநகரான கொழும்பில் ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலய கட்டட அமைப்புத் திட்டம் நிறைவுபெறும் நிலையை எட்டியுள்ளது. உங்கள் அனைவரினதும் தாராள மனப்பாங்கு கொண்ட பங்களிப்பினால் இதுவரை 11 கோடி ரூபா (11,00,00,000 ரூபா) மதிப்பிலான திருப்பணி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இப்போது இறுதிக்கட்ட திருப்பணிகளுக்காக இரண்டு கோடி ரூபாவுக்கு (2,00,00,000 ரூபா) மேல் தேவைப்படுகிறது.

இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட விரும்பும் அன்பர்கள், ஆதரவாளர்கள், பக்தகோடிகள் யாவரும் ஆகக்குறைந்தது ரூபா 10.000 நிதியுதவி செய்தால் இக்கட்டுமானப்பணி விரைவில் பூரணமடையும். பகவானின் ஆலயம் விரைவில் பூரணமாக நிறைவுற உங்களின் மனப்பூர்வமான பங்களிப்பினை எதிர்பார்க்கிறோம்.

மஹாகர்த்த தாஸ்
ஆலயத் தலைவர்
சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம்,
இலங்கைக் கிளை.



நேரடியாகவோ வங்கி மூலமாகவோ உங்கள் நன்கொடைகளை செலுத்தலாம்.
Bank Name: Commercial Bank (Bank Branch: Kotahena)
Account Name: ISKCON Tample Fund
Account No: 1120017042, Swift Code: CCEYLKLX
Bank Name: Hatton National Bank (Bank Branch: Kotahena)
Account Name: ISKCON, Account No: 207010000891/ Swift Code: HBLIKLX

SRI SRI RADHA KRISHNA TEMPLE CONSTRUCTION PROJECT
INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS
Founder: His Divine Grace A.C Bhaktivedanta Swami Prabhupada
No. 188. New Chetty Street, Colombo-13
Tel: 011-2433325/ E-mail: iskcon@slt.lk / Web: www. iskcon.lk

# தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நாடாளுமன்ற விசேட குழுவின் கால எல்லை ஜூலை 15 வரை நீடிப்பு





தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பில் பொருத்தமான சீர்திருத்தங்கள் குறித்த முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை ஜூலை 15ஆம் திகதிவரை நீடிப்பதற்கு, தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும், தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் நியமிக்கப்பட்ட விசேட நாடாளுமன்றக் குழு நேற்று தீர்மானிததுள்ளது.

அதற்கமைய குறித்த தினத்துக்கு முன்னர் முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு அக்குழுவின் தலைவர் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தார். முன்மொழிவுகளை sec.pscelectionreforms2021@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அல்லது செயலாளர், நாடாளுமன்ற விசேட குழு, இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை என்ற முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிவைக்க முடியும்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளை மறுசீரமைப்பது தொடர்பான நாடாளுமன்ற விசேட குழுவுக்கு இதுவரை கிடைத்துள்ள முன்மொழிவுகளின் எண்ணிக்கை 94 ஆகும் என இக்குழுவின் செயலாளரும், நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர இக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பவித்திரா வன்னியாராச்சி, அலி சப்ரி ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுர திஸாநாயக்க, கபீர் ஹாசிம், ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன், மதுர வித்தாரன மற்றும் சாஹர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

முன்னெடுக்கப்படும் தேர்தல் மறுசீரமைப்புக்கமைய எதிர்வரும் தேர்தல்களை கலப்புமுறைமையின்கீழ் முன்னெடுப்பதற்கும் குழு இணக்கம் தெரிவித்தது. இந்தக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்றத்துக்கான தேர்தல் முறைமைகளில் மாற்றங்களை மேற்கொள்வது குறித்த கலந்துரையாடல்களை முன்னெடுக்கவும் இங்கு இணங்கப்பட்டது.

முன்மொழிவுகளை வழங்குபவர்களிடமிருந்து வாய்மொழிமூல சான்றுகளைப் பெற்றுக்கொள்ள குழு விரும்பினால் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரியநேரத்தில் குழுவின் முன் ஆஜராகுமாறு அழைக்கப்படுவர் என்றும் இக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதும், தேவையான திருத்தங்களை பரிந்துரை செய்வதும் இக்குழுவின் பொறுப்பாகும்.

# ஊவா மாகாணத்துக்கு புதிய பிரதானிகள் மூவர் நியமனம்







**ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம், அமைச்சு மற்றும் உள்ளூராட்சித் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு புதிய பிரதானிகள், ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

**அதற்கமைய ஊவா மாகாண ஆளுநரின் புதிய செயலாளராக எம்.எம்.விஜயநாயக்க நேற்று தனது நியமனக் கடிதத்தை ஆளுநரிடமிருந்து பெற்றுக்கொண்டார். எம்.எம்.விஜயநாயக்க முன்னர் ஊவா மாகாண உள்ளாட்சி ஆணையாளராக கடமையாற்றினார்.**

**அதேவேளை, மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளராக ஆளுநரின் செயலாளராகக் கடமையாற்றிய நிஹால் குணரத்னவும், உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளராக பெல்கஹதென்ன பயிற்சி நிறுவனத்தில் பணிப்பாளராகக் கடமையாற்றிய எம்.பீ.ஏ.ஜீ. அநுருத்தவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

**இந்த நிகழ்வில் ஊவா மாகாண பிரதான செயலாளர் விஜயரத்னவும் கலந்துகொண்டார்.**

# மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் சகல சேவைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தம்




நாட்டில் பரவிவரும் கொரோனா தொற்று நிலைமையின் காரணமாக சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய, அனைத்து சேவைகளையும் மேலும் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் சுமித் சீ.கே.அலஹகோன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் 0707677877 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அலுவலக நேரங்களில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய நேரங்களில் whatsapp, viber, sms செய்தி ஒன்றை அனுப்புவதன் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை எமது சேவை பெறுநர்களுக்கு அறிவிக்கின்றோம்.

மீண்டும் அனைத்து சேவைகளும் ஆரம்பிக்கப்படும் திகதி தொடர்பில் ஊடகங்களின் ஊடாக அறிவிக்கப்படும் என்பதுடன், அனைத்து தகவல்களையும் அறிந்துகொள்ளும்பொருட்டு மேலே குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துமாறும், தயவுடன் அறிவிக்கின்றேன் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# நிந்தவூரில் ஒருவர் சடலமாக மீட்பு!

**(நூருள் ஹுதா உமர்)**

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவில் வயலோரம் உயிரிழந்த நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேச சபை கட்டிடத்திற்கு பின்னால் அமைந்துள்ள வயல் காணியில் சடலமாக காணப்படுபவர் இறைச்சிக்கடை சார்ந்த கூலித்தொழிலில் ஈடுபட்டுவரும் 60 வயதளவில் மதிக்கத்தக்க உபாலி என அறியப்படும் ஜாபீர் என்பவர் என்றும் போதைப்பொருள் பாவனை பழக்கம் உள்ள இவர் கடந்த காலங்களிலும் இவ்வாறு போதைப்பொருள் மூலம் நிதானமிழந்து வீதிகளில் விழுந்து கிடந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணிக்கக்கல் - தங்க ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கான சலுகைகள் மீண்டும் அரசாங்கத்தால் பெற்றுக்கொடுக்கப்படும்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணங்களை ஏற்றுமதி செய்பவர்கள், ஏற்றுமதியில் ஈடுபடும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்துமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணங்க்ள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டின் ஏற்றுமதி பரிமாற்றத்தில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக சுற்றுலாத்துறையைபோன்று மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரண பிரிவின் அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்தி அதற்கான உதவிகளை வழங்கவேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கான சகல வசதிகளையும் இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ஏற்றுமதியாளர்களின் கோரிக்கைக்கமைய சுற்றுலா வர்த்தக நடவடிக்கைகளை அடிப்படையாகக்கொண்ட வரமான வரியை நாட்டில் வெளிநாட்டு நிதி புலக்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

எமது நாட்டின் இரத்தினக்கல் தங்க ஆபரணத் தொழிலை உலகளாவிய ரீதியில் பிரபலப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைள் தொடர்பிலும் பிரதமர் இதன்போது கவனம் செலுத்தினார்.

இந்தத் துறைக்காக கடந்த அரசாங்கத்தால் பறிக்கப்பட்ட சலுகைகளை முறையாக மீண்டும் திருப்பித்தர நடவடிக்கை எடுக்கப்படும். எங்களின் வரவு-செலவுத் திட்டத்தினூடாக ஏற்றுமதியாளர்களுக்கு நிவாரணம் வழங்கியுள்ளதாகவும், அந்த சலுகைகள் முறையாக வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் பிரதமர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில், இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பாதிக்கப்பட்ட 125 உலமாக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள கொலன்னாவ பிரதேசத்தில் சுமார் 125 உலமாக்களுக்கு அல்-இப்ராஹிமியா ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் முதல் தடவையாக பெறுமதியான உலருணவுப் பொதிகளும் சிறு உதவுதொகைகளும் நேற்று வழங்கப்பட்டன.

பள்ளிவாசல் தலைவர் எம்.பசீன், போசகரும் சமூக சேவையாளருமான ஏ.ஆர்.எம்.முதஸ்சிர் உள்ளிட்ட நிர்வாகிகளும் சமூக சேவையாளர்களான எஸ்.ரி.முராஜுதீன், எஸ்.நிப்ராஸ் ஆகியோரும் இணைந்து இந்த உதவிகளை வழங்கியுள்ளனர்.

இதன்போது கொவிட் நோய் விரைவில் நீங்கவேண்டும் எனவும் நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு வேண்டியும் விசேட துஆப் பிரார்த்தனையும் இடம் பெற்றது.

கொலன்னாவ பள்ளித் தலைவரும், சமூக சேவையாளருமான கலாநிதி ஹனிப் ஹாஜி மற்றும் பெறோஸ் ஹாஜி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# ஹெரோயினுடன் கைதான உப பொலிஸ் பரிசோதகருக்கு 28ஆம் திகதிவரை விளக்கமறியல்

ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதான களுத்துறை தெற்கு பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட மூன்று பேரையும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹிக்கடுவ, பத்தேகம வீதியில் ஒரு சொகுசு காரில் 51 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களை கொண்டுசென்றபோது குறித்த உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டார்.

பின்னர், போதைப்பொருட்களைப் பெறுவதற்காக அத்துருகிரிய அதிவேக நெடுஞ்சாலையின் நுழைவாயிலில் காத்திருந்த வாகனத்தில் வந்த மேலும் இருவரை பொலிஸார் கைதுசெய்யப்பட்டனர்.

தற்போது வெளிநாட்டிலுள்ள பாணந்துறை சாலித என்ற பெயரிலான போதைப்பொருள் வியாபாரிக்கு சொந்தமான போதைப்பொருளையே இவர்கள் கடத்தியிருந்தமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்தது.

இந்த போதைப்பொருட்களை கடத்துவதற்காக குறித்த உப பொலிஸ் பரிசோதகர் 5 இலட்சம் ரூபாவை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடன் அட்டைகளை பயன்படுத்தி பணமோசடி; சீனப் பிரஜை உட்பட நால்வர் கைது

போலி கடன் அட்டைகளை தயாரித்து பண மோசடி செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சீனப் பிரஜை ஒருவரும் இலங்கையர்கள் மூவரும் கல்கிசையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்களினால் போலி கடன் அட்டைகள் தயாரிக்கப்பட்டு அவற்றை பயன்படுத்தி ஒன்லைன் ஊடாக பல்வேறு பொருட்களை கொள்வனவு செய்திருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தில் சுமார் 7 இலட்சத்து 87 ஆயிரம் ரூபா நிதி மோசடி இடம்பெற்றமை தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாட்டையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்தே இந்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# யானை தாக்கி ஒருவர் பலி

**(அனுராதபுரம்)**

மிஹிந்தலை கனந்தராவ சியம்பலாகஸ்வெள பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளான இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை கனந்தராவ சியம்பலாகஸ்வெள அரச வனப்பகுதிக்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 31 வயதுடைய சியம்பலாகஸ்வெள பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

மிஹிந்தலை கனந்தராவ குளத்திற்கு மீன் பிடிப்பதற்காக வீட்டிலிருந்து சென்ற இளைஞனே இவ்வாறு காட்டுயானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்பது மேலும் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாகாண எல்லைகளை கடக்க அனுமதி இல்லை

நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத் தடையானது தற்போது தளர்த்தப்பட்டுள்ள நிலையில், அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்காக வரையறுக்கப்பட்ட அளவில் பொது போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் - என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகளினால் குறைந்த எண்ணிக்கையிலான பேருந்து சேவைகள் ,டம்பெறும் என்றாலும் அவை மாகாண எல்லைகளை கடக்க அனுமதி வழங்கப்படாது என தெரிவித்தார்.

இந்நிலையில், மாகாணங்களுக்குள் நேற்று முதல் சுமார் 17 புகையிரத சேவைகள் திட்டமிட்டபடி இயங்கும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகளுக்காக இதுவரை இயக்கப்படும் ஏனைய பொது போக்குவரத்து சேவைகள் எவ்விதமான மாற்றங்களும் ,ன்றி இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்தார்.



**துறைமுக அதிகாரசபைக்கு புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல, நேற்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபயகுணவர்தனவிடம் நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டார்.**

1ST ANNIVERSARY

## வாழ்த்துப் பூக்களை சொரிகின்றேன்

தமிழன் நாளிதழே..!
நீ பிறந்து வருடமொன்று
கடந்தது - வா வியக்கின்றேன்
சுடச்சுடச் செய்திகளை
சுவைபட நீ வழங்கியதும்
இனங்கள் மதங்களென்ற
பேதம் நீ மறந்ததுவும்
அழகு தமிழ் மாறாமல்
உன் ஆக்கம் அமைந்ததுவும்
உன் துரித வளர்ச்சிக்கு
உரமென்பேன்
வார இதழதன்
விடயதானங்கள் தரமாக
நீ தருவாய்
கவிதை கட்டுரைகள்
சினிமாச் செய்திகளும்
அரசியல் விமர்சனங்கள்
அறிவியல்சார் தேடல்களும்
குறுந்தகவல் குறிப்புக்கள்
எல்லாமே ஏற்றந்தான்
சிகரம் வைத்தாற்போல்
சிறுவர்க்கோர் பின்னிணைப்பு
மொத்தத்தில்
தமிழ் பேசும் மக்களுக்கோர்
மங்கா ஒளிவிளக்கே..!
இன்னும் பல தசாப்தங்கள்
நீ வீறுநடை பயில
வாழ்த்துகிறேன் உளமார
வாழ்த்துப் பூக்களை நான்
வாரிச் சொரிகின்றேன்

ஏ.ஆர்.ஏ.சத்தார்
மருதமுனை

## ஒரு வருட பூர்த்தி வாழ்த்து

தமிழுக்கு உயிர் கொடுக்க
தரம் பார்த்து படைப்பெடுத்து
தமிழையே உயர் இதழாய்
தரணியிலே உயர்த்திவிட்டாய்

சிறுவர்கள் உள்ளங்களில்
சிந்தனையை வளர்த்து விட்டாய்
சிறுத்தை போல் பாய்கின்றார்
சிறுகதையை பார்ப்பதற்கு

புலமைப் பரீட்சைக்கென
புதுயுகம் படைத்து விட்டாய்
புலரும் பொழுதினிலும் எம்மை
பூரிப்புடன் படிக்கவைத்தாய்

பொது அறிவை திறக்கவைத்து
பொன்னுலகம் காட்டி விட்டாய்

மது மாது விலக்கி வாழ
மகுடமாக மாறிவிட்டாய்

கலைஞர் பல உருவாக்கும்
களமாக அமைந்து விட்டாய்
மலையையும் உடைத்து விடும்
மன உறுதி அமைத்து விட்டாய்

வயதான மனிதரையும் இன்று
வாலிபனாய் மாற்றி விட்டாய்
புயலாக உருவம் கொண்டு
பூவுலகம் மணக்க வைத்தாய்

ஏ.எம்.ஜெலீல்
ஹிஜ்ரா வீதி
மருதமுனை-03

## தமிழா!

இருப்பிடத்தின்
வாழ்வை வண்ணங்கள்
தூவி
இருளை இல்லாமல் செய்து
தமிழால் எழுந்தோம்
தமிழனாக நிமிர்ந்தோம்
தமிழனால் நிமிர்ந்து
கொண்டிருக்கின்றோம்

வாழ்வின் எல்லையற்ற
பெருவெளியில்
நிகழ்நிலையின் பரப்பை
காட்சிப்படுத்தி
பாடுபொருளாக நிற்கின்றான்
தமிழன்

சமூகம் சாட்சியம்
இருப்பிடம் - சராசரி வாழ்க்கை
பண்பாடு இலக்கியம்
எனும் பண்பட்ட வெளியில்
தழைத்து
கிளை பரப்பி வாழ்வின் அங்கமாக
துளிர்த்து கிளையில் தழைத்து
வீழ்ந்தோம் என்பதை தகர்த்து
வாழ்ந்தோம் எழுந்தோம் என்பதில்
தமிழனாக வீறு கொண்டெழுந்து
வீராப்புடன் நின்று
கொண்டிருக்கையில்
வருடங்கள் ஒன்று என்று
பூரித்து நிற்கின்றோம்

ஒரு வருடம் என்றாலும்
தமிழனின் பக்கங்களோடு
உறவாடிய
காலங்கள் ஒரு யுகத்துக்குள்
அடங்காது
சிநேகிதனாய் வழிகாட்டியாய்
அங்கத்துவனாக
தேவையின் உச்சம் அறிந்து
ஒன்றோடு ஒன்றாய் எம்மோடு
நின்று
இன்றும் தோளாக நிற்கிறாய்

நடுநிலை நேர்மை துணிச்சல்
துவண்டு போகாத தைரியத்தை
கண்டு
பூரித்து பூப்பறிக்கிறோம்

ஆயிரம் பூச்செண்டுகளை அள்ளிக்
கோர்த்து
புன்னகை தவழ ஓராயிரம்
வாழ்த்துகளும்
பிரார்த்தனைகளும் உரித்தாகட்டும்
-நஸார் இஜாஸ் -

## தமிழன் நீ தரணியில் எழுக!

ஓராண்டு அகவையில்
ஒளிவீசிடும் நாளிதழே..!
உன் பணி நற்பணியாய்
உயர்ந்தது தமிழிதழே..!

உள்ளங்கவர் தலைப்புகளால்
உழைக்கின்றாய் மக்களுக்காய்
அறம் காத்த கருத்துகளை
அருளுகின்றாய் எம்மவரிடம்

மனுநீதி காக்கவே
மறைக்காமல் உண்மைகளை
மாந்தர் தம் மனதில்
விதைக்கின்றாய் விரைவாக

தாங்கிவரும் தகவல்களை
தரமாக பதிக்கின்றாய்
தரணி எங்கும்
தமிழ் மணம் பரப்புகின்றாய்

அடிபிறழாது உன் சேவையே
அகிலம் முழுதும் வாழுமே
அன்பான வாசகர் வாழ்த்துகளால்
அலை போல வீசுமே
வாழ்க உன் சேவையே..!
வளர்க உன் பணியே..!

மகேஸ்வரன் திவ்யா
ராகலை

## தமிழனே வாழ்க!

அடக்குமுறைகளால்
ஒடுக்கப்பட்டுக் கிடக்கும்
தமிழ் பேசும்
மக்களின்
ஒப்பாரிக் குரல்களை
உலகுக்கு எடுத்துக்காட்டும்
உரிமைக்குரலே தமிழனே..!

உன் பிறப்பு
நமக்குக் கிடைத்த
மதிப்பு
நம் அவலங்களை
சுமந்து செல்வது
பெரும் சிறப்பு

இந்த நூற்றாண்டில்
இருட்டில் கிடக்கும்
வாசிப்பில்
உன் பயணம்
கடுமையானதுதான்

மக்களின் விழியோரத்து
கண்ணீருக்கு
உன் விரல்கள்
ஒத்தடமிடுகின்றன

பல ஏடுகள்
தடங்கலுக்குள்
தடையாக
மரணப் படுக்கைக்கு
சென்று விட்டன
இந்த நிலையில்
உன்னுடைய மலர்வு
நமக்கெல்லாம்
மீள்வாழ்வு

அறியாத செய்திகளை
அறியத்தந்து
தெரியாத தகவல்களை
தேடி வந்து
தேடல் பசியை
தீர்க்கின்றாய்

சீத்துவக்கேடென்றும்
விளையாட்டு
தமிழன் தர்பாரென்றும்
கவி தூவும் தூறல்கள்
சிறுகதை தொடர்கதையென்றும்
சந்தேகங்கள் தீர்க்கும்
குறும்பன் பதில்
இலக்கிய தகவல்களோடு
இடர்கால இலக்கியம்
இலக்கிய சங்கமம் என்று
எத்தனையோ பக்கங்களை
பயனுள்ளதாய்
சுவையேற்றித் தரும் நீ

சிறுவர்களின் கல்விக்காய்
அறிவுக்காய்
பொழுது போக்கிற்காய்
மொழி கற்றலுக்கென்று
ஜூனியர் தமிழனையும்
தோளில் சுமந்து வந்து
தோழமை கொள்கிறாய்

உன் பிறப்பை சொல்லும்
இந்த நாளில்
வியப்பாய் இருக்கிறது
உன் வளர்ச்சி
சிறப்பாய் தெரிகிறது
உன் பயன்கள்

தொடரட்டும் உன் பணி
வளரட்டும் உன் புகழ்
மலரட்டும் எதிர்காலம்
மரணமில்லா வரம்
கிடைத்து
உன்னை வரலாறு பேசட்டும்
தரணியில் ஓங்க
தமிழனே வாழ்க..!

புத்தளம் ஸாலிஹ் அஸீம்

## தலைநிமிர்ந்த தமிழன்

தமிழன் என்ற பெயரோடு
தமிழ் பேசும் மக்களுக்காய்
தலைநிமிர்ந்து வந்த
தரமான தமிழன் நீ

ஆண்டு ஒன்றை ஆக்கிரமித்து
ஆனந்தமாய் எம்மில்
இணைந்து
ஆடம்பரம் இல்லாது
அமைதியாய்
ஆர்ப்பரித்து எம்மை
அரவணைத்தாய்

நேர்மையான ஊடகமாய்
நின்று
நேர்த்தியாக நல்ல செய்திகளை
நேர்கோட்டில் தந்து எம்மை
நேசம் கொள்ளச் செய்கின்றாய்

உண்மைச் செய்திகளுக்கு
நன்றாய்
உயிர் கொடுத்து
உலகம் அறியச் செய்யும்
உயர்வான தமிழன் நீ

ஆண்டுகள் பல நூறு
ஆனந்தமாய் நீ பயணிக்க
ஆண்டவன் அருளை தினம்
ஆர்வமாய் கேட்கின்றேன்
அவனிடம்

கலாபூஷணம்
பி.எம்.எம்.ஏ.காதர்

## தமிழன்

தமிழெனும்
பாற்கடலில்
நீந்திக் கொண்டே
பொழுதைப் போக்கிடவும்
அறிவோடும்
மனித நேயத்தோடும்
பயணித்திடவும்
கிடைத்ததொரு
வரமிந்த தமிழன்

சமகால அரசியல்
உலகத்தின் அரங்கு
சமூக மாற்றம்
இலக்கியத் திறத்திற்கான
வரவேற்பறை
பெண்களுக்கும்
சிறுவர்களுக்குமான
தனித்தனி களங்களோடும்
ஆரோக்கிய வாழ்வுக்கும்
வழிகாட்டியாக
சாதிமத பேதமற்று
வெற்றிகரமாக
பயணிக்கும்
தமிழனுக்கு ஓராண்டு நிறைவு
வாழ்த்துகள்

மயிலிறகு மனசு
சிபானா அஸீம்

## ★தமிழனாய் நீ தடம் பதித்திடு★

காலைக் கதிரொளியாய்
நீ எம் காரிருள் நீங்கிடவே
தித்திக்கும் தேனிதழாய்
நீ எம் புத்திக்கு
பேரொளியாகிடவே
தமிழனாய் நீ இன்று இடம்
பிடித்து
தரணியில் தடம் பதித்து
இன்றுடன் ஓராண்டு

எழுத்திற்கு உயிர் கொடுத்து
கவிதைக்கு கரு கொடுத்து
அறிவியலை எம் அகத்திலே
நுழைத்து
அரசியலை ஓர் அங்கமாக்கி
சினிமாவை சீராய் பேணி
விளையாட்டை வினோதமாக்கி
சிறாரையும் காந்தமாய் ஈர்க்கும்
உன் வாடாத எழுத்துப்பணியில்
தளிர் நடை போட்டு
தடம்பதித்து
தரணி எங்கும் அறிவொளி
கொடுத்து இன்றுடன் ஓராண்டு

புத்தம் புது மலராய் நீ இன்று
திகட்டாத முத்துச் சாளரமாய்
சிந்தையிலே சிறைபிடித்து
சிலிர்க்கவைக்கும் செல்ல
குழந்தையை போல்
வீறு கொண்டெழுந்து
வீரநடை போட்டு
விருட்சமாய் மனதில்
மலர்ந்திடவே
அகவை ஒன்று மலர்ந்திருக்கும்
தருணத்தில்
உன் ரசிகையாய் நானும்
உன்னை வாழ்த்துகிறேன்

குறுகிய காலத்திலே மனங்களை
தொட்டுவிட்ட
இதயச் சூரியனே..!
நீ தரணி எங்கும் ஒளி கொடுத்து
நினைவுகளில் நிஜமாகி
ஓராண்டல்ல ஓராயிரமாண்டு
ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட
காவியமாய்
என்றும் வலம் வர கவித்
தாரகையாய் நானும் மனதார
வாழ்த்துகிறேன் தமிழனே
வாழ்க..! தமிழ் மொழியே
வாழ்க..!

தமிழன் வாசகி
ஷிமா ஹரீஸ்
பேராதனை
பல்கலைக்கழகம்

## தமிழனே நீ வாழிர்!

மனிதராய் அதிலும் தமிழனாய்
பிறந்திட்டால் தனி கர்வம்
தழைத்தோங்கும்
தமிழன் நாமம் அடையாளம்

தமிழனின் அடையாளச்
சின்னமாய் மிளிரும்
தமிழன் பத்திரிகையே
நீ வாழிர்..!

உலகப் பார்வையை
தன்னுள் அடக்கி
வாசகனின் அறிவை
செப்பனிடுகிறய்
நீ வாழிர்..!

உன் இதழ்களை
புரட்டும் போதுதான்
என் அறிவுச் செல்களும்
பட்டை தீட்டப்படுகின்றன

புதுமைகள் படைத்திடுவாய்
நூற்றாண்டுகள் காண்பாய்
தமிழனே நீ வாழிர்..!

நலூஜா விஜயரட்ணம்
நுவரெலியா

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



## லங்கா ப்ரீமியர் லீக் 2021

# ஐந்து அணிகளினதும் முக்கிய உள்நாட்டு வீரர்கள் அறிவிப்பு

## அணி மாறிய குசல் பெரேரா, டிக்வெல்ல: ஓர் அணி நான்கு வீரர்களை தக்கவைக்கலாம்!

– ஏ. அகீல் சிஹாப்

கிரிக்கெட் உலகில் ஏராளமான இருபதுக்கு 20 லீக் தொடர்கள் நடைபெற்றுவரும் நிலையில் இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டிலும், வெளிநாட்டு வீரர்களின் பங்கேற்புடனும் மிகவும் பிரம்மாண்டமான முறையில் 'லங்கா ப்ரீமியர் லீக்' என்ற பெயரில் இருபதுக்கு 20 லீக் தொடரானது கடந்த வருடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

ஐந்து அணிகளின் பங்கேற்புடன் கடந்த நவம்பர் – டிசம்பர் மாதங்களில் நடைபெற்ற குறித்த தொடரானது வெற்றிகரமாக நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, இரண்டாவது பருவ காலத்திற்கான தொடரானது எதிர்வருகின்ற ஜூலை மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது.

இந்நிலையில் ஒவ்வொரு அணியினதும் உள்நாட்டு முக்கிய வீரர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடப்பு சம்பியனான ஜஃப்னா ஸ்டாலியன்ஸ் அணியின் முக்கிய உள்நாட்டு வீரராக சகலதுறை வீரரான வனிந்து ஹசரங்க பெயரிடப்பட்டுள்ளார். கடந்த வருடம் சகலதுறை வீரரான திஸர பெரேரா அந்த அணியின் தலைவராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கண்டி டஸ்கர்ஸ் அணியின் முக்கிய வீரராக இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரான நிரோஷன் டிக்வெல்ல பெயரிடப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடம் தம்புள்ள வைக்கிங் அணியில் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு கிங்ஸ் அணியின் முக்கிய வீரராக இலங்கைக் கிரிக்கெட் அணியின் தற்போதைய தலைவர் குசல் பெரேரா பெயரிடப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடம் கண்டி டஸ்கர்ஸ் அணியின் தலைவராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலி கிளாடியேட்டர்ஸ் அணியின் முக்கிய வீரராக இலங்கைக் கிரிக்கெட் அணியின் இடதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தனுஷ்க குணதிலக்க பெயரிடப்பட்டுள்ளார். தம்புள்ள வைக்கிங் அணியின் முக்கிய வீரராக இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான தசுன் சானக்க பெயரிடப்பட்டுள்ளார். கடந்த வருடம் அந்த அணியின் தலைவராகவும் தசுன் சானக்க செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடருக்கான வீரர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில், எதிர்வரும் 27ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் இந்த நடைமுறைகள் அனைத்தும் நிறைவு பெறுவதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து ஒரு வார காலப் பகுதிக்குள் வீரர்களைத் தெரிவுசெய்வதற்கான ஏலம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு அணியில் மொத்தமாக 20 வீரர்கள் இடம்பெற முடியும். அதில் 14 வீரர்கள் உள்நாட்டு வீரர்களாகவும், அதாவது இலங்கை வீரர்களாகவும், 6 வீரர்கள் வெளிநாட்டு வீரர்களாகவும் ஒரு அணியில் இடம் பெற முடியும். இதில் ஒரு அணியானது தங்களுடைய அணியில் 4 வீரர்களைத் தக்கவைக்க முடியும். அதாவது கடந்த வருடம் அணியில் விளையாடிய வீரர்களில், இரு உள்நாட்டு, இரு வெளிநாட்டு வீரர்களைத் தக்கவைக்க முடியும். ஏனைய வீரர்கள் அனைவரையும் நடைபெறவுள்ள ஏலத்தின்போது கொள்வனவு செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூன்று உலகக்கிண்ண தொடர்களை நடத்தும் உரிமையைக் கோரவுள்ள பி.சி.சி.ஐ.

2024 ஆம் ஆண்டிலிருந்து அடுத்த எட்டு ஆண்டுகளில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடர்களின் அட்டவணை, சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் அண்மையில் வெளியிடப்பட்டிருந்து. இதில் 2025ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர், 2028ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடர் மற்றும் 2031ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடர் ஆகிய மூன்று உலகக்கிண்ணத் தொடர்களையும் நடத்துவதற்கான உரிமையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கோருவதற்கு முடிவெடுத்துள்ளது.




இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் அவசர உயர் மட்டக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில், அதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒவ்வொரு 2-3 ஆண்டுகளுக்கொரு முறை உலகக்கிண்ணத் தொடர்களை நடத்தும் நிலையில் இந்தியா இருக்க வேண்டும் என்பதாலேயே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## EURO Cup 2020

# குழு 'ஏ' யிலிருந்து இத்தாலி, வேல்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி

கால்பந்து உலகின் பிரபலமான தொடர்களில் ஒன்றான 24 ஐரோப்பிய நாடுகளின் பங்கேற்புடன் கடந்த 12ஆம் திகதியிலிருந்து நடைபெற்று வருகின்ற 'யூரோ கிண்ண' கால்பந்துத் தொடர் மிகவும் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. முதல் சுற்றுப் போட்டிகள் தற்போது நிறைவடையும் தறுவாயில் உள்ளன. நேற்று முன்தினம் மூன்று போட்டிகள் நடைபெற்றன. குழு 'ஈ' இற்கான போட்டியில் ஸ்பெயின் மற்றும் போலந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டி 1 - 1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் நிறைவுக்கு வந்தது.





குழு 'ஏ' இற்கான அனைத்துப் போட்டிகளும் நிறைவு பெற்றுள்ள நிலையில் இத்தாலி மற்றும் வேல்ஸ் ஆகிய இரு அணிகளும், 16 அணிகள் விளையாடும் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றிருக்கின்றன. இத்தாலி - வேல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்திய போட்டியில் இத்தாலி அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. குழு 'ஏ' இற்கான கடைசிப் போட்டியில் சுவிட்ஸர்லாந்து - துருக்கி அணிகள் மோதின. இப்போட்டியில் சுவிட்ஸர்லாந்து 3 - 1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

குழு 'ஏ' யிலிருந்து துருக்கி அணி வெளியேறியுள்ள அதேவேளை, சுவிட்ஸர்லாந்து அணியின் வாய்ப்பு எவ்வாறு அமையும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

*சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் வழங்கப்படும் மிக உயர்ந்த 'ICC Hall of Fame' கௌரவத்தில் இரண்டாவது இலங்கையராக இணைந்துகொண்ட முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவுக்கான சின்னம் நேற்று முன்தினம் சவுதம்டன், த ரோஸ் போல் மைதானத்தில் வைத்து, இந்திய கிரிக்கெட் ஜாம்பவான்களில் ஒருவரான சுனில் கவாஸ்கரினால் வழங்கிவைக்கப்பட்டது.*



# விம்பிள்டனிலிருந்து நஓமி ஒசாகாவும் விலகினார்



டென்னிஸ் உலகின் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட, இந்த ஆண்டின் அடுத்த கிராண்ட்ஸ்லாம் தொடரான விம்பிள்டன் டென்னிஸ் எதிர்வரும் 28ஆம் திகதி லண்டனில் ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த தொடரிலிருந்து விலகுவதாக உலகின் இரண்டாம்நிலை வீராங்கனையான ஜப்பானைச் சேர்ந்த நஓமி ஒசாகா அறிவித்துள்ளார்.

நஓமி ஒசாகா அண்மையில் நடைபெற்ற பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து இடைநடுவில் விலகினார். ஊடகவியலாளர் சந்திப்பைப் புறக்கணித்த காரணத்தின் அடிப்படையில் அவருக்கு அபராதமும், எச்சரிக்கையும் விதிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நஓமி ஒசாகா குறித்த பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து விலகியிருந்தார்.

இந்நிலையிலேயே, விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் இருந்து விலகுவதாக நஓமி ஒசாகா அறிவித்துள்ளார். எனினும், டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் அவர் பங்கேற்பார் என டென்னிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நடைபெறவுள்ள விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து விலகுவதாக ஸ்பெயின் நாட்டின் நட்சத்திர வீரரான ரஃபேல் நடால் தெரிவித்துள்ளார். மேலும், அவர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளிலும் பங்கேற்க மாட்டார் என்று தெரிவித்துள்ளார்.

# 'தனஞ்சய லக்ஷான் 2023ஆம் ஆண்டுக்குள் தவிர்க்க முடியாத வீரராக இருப்பார்'

## மாலிங்க நம்பிக்கை



இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான லசித் மாலிங்க தற்போது வீட்டில் இருந்தவாறு 'யூடியூப்' அலைவரிசை ஒன்றினை நடத்தி வருகிறார். இதில் கருத்து தெரிவித்த அவர், தற்போது இளம் சகலதுறை வீரராக அணியில் இடம்பெற்றுள்ள தனஞ்சய லக்ஷான், 2023ஆம் ஆண்டிற்குள் இலங்கை அணியால் தவிர்க்க முடியாத ஒரு வீரராக இருப்பார் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தனஞ்சய லக்ஷான் ஒரு சிறந்த இருபதுக்கு 20 பந்துவீச்சாளர். ஆனால், ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்கும் அவர் பொருத்தமான வீரராக உள்ளார். எனவே, 2023 உலகக் கிண்ணத்தைக் குறிவைத்து தேர்வுக்குழு மற்றும் இலங்கை கிரிக்கெட் என்பன அவரை இலங்கை அணியில் இணைத்துக் கொண்டுள்ளமை ஒரு நல்ல முதலீடு என்று நான் நினைக்கிறேன். ஒரு சகலதுறை வீரராக அஞ்சலோ மெத்யூஸ் இலங்கை அணிக்கு வழங்கிய அதிகபட்ச பங்களிப்பினை நிச்சயம் தனஞ்சய லக்ஷானாலும் வழங்கமுடியும்'' என்று தெரிவித்துள்ளார்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7